ஸ்ரீ:

சமண முனிவர்

இயற்றிய

நாலடியார் மூலம்

மேற்கோள் விளக்கம்

அரும்பத அகராதி

முதலியவற்றுடன்

மயிலாப்பூர்

A. K. ஸ்வாமி அண்டு கம்பெனியாரால்

DONATED BY.
R. NATARAJAN.
(Grandson of Sadhu Seshayya)
in Memory of his father
K. RAMARATHINAM IYIER.

இராயபேட்டை

சாது அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது

Copy right Registered] 1924 [விலை அணா 8

பொருளடக்கம்

முகவுரை — பக்கம் V

அச்சாகி வெளிவந்தனவாக இப்பொழுது தெரிந்த நாலடியார்ப் பிரதிகளின் விவரம் iv

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர் முதற்குறிப்பகராதி முதலியன xii

அறத்துப்பால்

க. துறவறவியல் 3—31

1. செல்வநிலையாமை 3
2. இளமைநிலையாமை 8
3. யாக்கைநிலையாமை 12
4. அறன்வலியுறுத்தல் 15
5. தூய்தன்மை 20
6. துறவு 24
7. சினமின்மை 28

உ. இல்லறவியல் 32—56

1. பொறையுடைமை 32
2. பிறர்மனைநயவாமை 36
3. ஈகை 40
4. பழவினை 44
5. மெய்ம்மை 48
6. தீவினையச்சம் 52

பொருட்பால்

க. அரசியல் 56—78

1. கல்வி 56
2. குடிப்பிறப்பு 60
3. மேன்மக்கள் 63
4. மேன்மக்களியல்பு 67
5. நல்லினஞ்சேர்தல் 69
6. பெருமை 72
7. தாளாண்மை. 75

செய்யுளகராதி 79—80

அரும்பதமுதலியவற்றினகராதி

அச்சாகி வெளிவந்தனவாக இப்பொழுது தெரிந்த நாலடியார்ப் பிரதிகளின் விவரம்.

	மூலம் or மூலமும் உரையும்	பதிப்பித்தோர் பெயர்	உரையாசிரியர் பெயர்	பதிப்பித்த ஆண்டு	இயந்திரசாலை	விலை முதலியன
1	மூலமு முரையும்	முத்துசாமி முதலியார்	புதுவை நயனப்பமுதலியார்	சாலிவாகனசகம் 1767ருத்ரோத்காரி கார்த்திகைமீ	ரிகார்டு பிரஸ்	ரூ. 7-0-0
2	மூலம்	ஞானப்பிரகாசர்		1812	மாசத்தினசரிதை	
3	,,	தாண்டவராயமுதலியார்		1831	சர்ச்மிஷியோன்	
4	மூலமு முரையும்	மயிலை-திருவேங்கட முதலியார்	வேதகிரிமுதலியார்	1908	பண்டிதமித்திரன்	
5	,,	குமாரசாமிபிள்ளை	கோமளபுரம் ராசகோபாலபிள்ளை	1903 ஏப்ரல்மீ	ரிப்பன் பிரஸ்	ரூ. 1-0-0
6	,,	கே. பொ. சிங்காரவேலு முதலியார்	களத்தூர் வேதகிரிமுதலியார்	1913	பூமகள்விலாஸம்	ரூ. 1-4-0
7	,,	சே. கிருஷ்ணமாசாரியார்	வை. மு. சடகோபராமானுசாசார்ய	1921	ஸ்ரீகணேச	ரூ. 2-0-0
8	மூலம்	சீநிவாஸபிள்ளை	புதுவை அ. வேதகிரிமுதலியார்	1837		ரூ. 1-0-0
9	,,			1861	பட்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்	ரூ. 1-0-0
10	,,	பு. க. ஸ்ரீனிவாசாசாரியார்		1915	வித்யாரத்நாகரம்	ரூ. 0-10-0
11	மூலமு முரையும்	பின்னத்தூர் A. நாராயண சாமி ஐயர்		1907, 1908	Tamil Text for F. A. 1909	
12	மூலம்	Rev. G. U. Pope.		1893	at the Clarendan Press, Oxford 1893	

முகவுரை

நாலடியார் என்பது கடைச்சங்கம் மருவிய பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.

கீழ்க்கணக்குநூல்களாவன:—௧ - நாலடி, ௨ - நான்மணிக்கடிகை, ௩ - இனியதுநாற்பது, ௪ - இன்னாநாற்பது, ௫ - களவழிநாற்பது, ௬ - கார்நாற்பது ௭ - ஐந்திணையைம்பது, ௮ - ஐந்திணையெழுபது, ௯ - திணைமொழியைம்பது, ௧௦ - திணைமாலைநூற்றைம்பது, ௧௧ - திருவள்ளுவப்பயன், ௧௨ - திரிகடுகம், ௧௩ - ஆசாரக்கோவை, ௧௪ - பழமொழி, ௧௫ - சிறுபஞ்சமூலம், ௧௬ - முதுமொழிக்காஞ்சி, ௧௭ - ஏலாதி, ௧௮ - கைந்நிலை என இவை ; இதனை,

“ நாலடி நான்மணி நானாற்ப * தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழிமாமூலம்
† மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
‡ கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு ”

என்னும் வெண்பாவாலறிந்து கொள்க.

கணக்கு - மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என இருவகைப்படும். ஐம்பது முதல் ஐந்நூறு இறுதியாக ஐவகைப்பாவானும் வருவது மேற்கணக்கெனப்படும். அவ்வகையெண்ணில் அறம் பொருள் இன்பங்களைப்பற்றி வெண்பா ஒன்றுமே வருவது கீழ்க்கணக்கெனப்படும். இவற்றிற்கு இலக்கணம்;—

“ மேல்கீழ்க் கணக்கென விருவகைக் கணக்கே ”

“ மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே ”

“ அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிகுத்துடன் றொகுப்பது மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே ”

(பி - ம்) * ‘ ஐந்தொகை ’ † ‘ இன்னிலைசொல் ’ ‡ ‘ கைந்நிலையோடாம் ’ ‘ நன்னிலையவாம் ’

"ஐம்பது முதலா வைந்நூ றீறா
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும்"

"அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வகைத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்"

எனவரும் பன்னிருபாட்டியற்சூத்திரங்களாலுணர்க. கீழ்க்கணக்கிற்கு வெண்பாவேயன்றி அதனினமும் ஆம் என்பது முதுமொழிக்காஞ்சியில்

"ஆயுர்கலி யுலகத்து மக்கட் கெல்லா
மோதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

என வெண்செந்துறை வந்தவாற்றானறிக. மேற்கணக்கிற்கே "ஐம்பது முதலா வைந்நூ றீறா" எனவும் "பதிற்றைந் தாதி பதிற் றைம்ப தீறா" எனவும் சிறுமைக்கும் பெருமைக்கும் எண் வரையறை கூறி, "அவ்வகை யெண்பெறின்" எனவும் "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி" எனவும் ஓதினமையாற் கீழ்க் கணக்குச் சிறுபான்மை ஐம்பதிற்குறைந்தும் ஐந்நூற்றின்மிக்கும் வருமெனக்கொள்க. இனியது, இன்னா, களவழி, கார் நான்கும் ஐம்பதிற்குறைந்துவந்தன. முப்பால் ஐந்நூற்றின் மிக்குவந்தது. இக் கீழ்க்கணக்கு நூல்களையே "தாயபனுவல்" என்னும் (தொல். செய். சூ. 236) பெயராற் கூறுவர் எனவும், இவை அறம் பொரு ளின்பமென்னு மூன்றற்குமிலக்கணஞ்சொல்லுவ எனவும், வேறிடை யிடை அவையன்றியுந் தாஅய்ச்செல்வதுமுண்டெனவும், இச்செய் யுட்கள் அடிநிமிராது இரண்டடிமுதல் ஆறடியிறுதியாக வருவன எனவும், அவை எழுத்தினைகன்றுகாட்டாது சில எழுத்தினான் வருவன எனவும், அவையெண்ணுச்சுருங்கிச் சிலவாக வருவன என வும், "வனப்பிய றானே" என்னும் செய்யுளியற்சூத்திரத்துப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உரைத்தவாற்றானுணர்ந்துகொள்க.

"சின்மென் மொழியாற் றாய பனுவலோ
டம்மை தானே யடிநிமிர் பின்றே"

என்ற தொல்காப்பியநெறியே போற்றி இப்பன்னிருபாட்டியற்கண் ணும் "அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி" எனக் கூறிய

றுங்காண்க. இந்நாலடியார் * அறம் † பொருள் ‡ இன்பமென மூன்றையும், சிலவாய மெல்லியசொற்களால் நான்கடியினொருமல் நானூறு எண்ணுள்ள வெண்பாவான் வந்தமையாற் கீழ்க்கணக்காயவாறு கண்டு கொள்க.

"நானூறும் வேதமா நானூறு நன்னூலா
நானூறுங் கற்றற்கு நற்றுணையா - நானூறும்
பண்மொழியாள் பாகம் பகிர்ந்து சடைக்கரந்த
கண்ணுதலான் பெற்ற களிறு"

இது, நாலடிப்பாக்களிற் சிறப்புற்று நாலடியார் (பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக்காரணப்பெயர்) என்ற தனிப் பெயர் பெற்று நூலுக்குக் கருவியாகுபெயராயிற்று. சைனரும் சைன நூல்களும் நாசமடைந்த பின்னும் காலகதியாய ஆற்றுப்பெருக்கால் அழியாமல் இந்நானூறுபாடல்கள் பிழைத்தன என்பது விளங்க,

"மன்னன் வழுதியர்கோன் வையைப்பே ராற்றி
னெண்ணி யிருநான்கோ டாயிரவ - ருன்னி
யெழுதியிடு மேட்டுக்கு ளேடெதிரே யேறும்
பழுதிலா நாலடியைப் பார்"

என்று ஒரு பழைய வெண்பா உள்ளது.

'வேறுசில ஏடுகளும் நீந்தின; அவைதாம் பழமொழி முதலியன' என்பாரும், 'நீர்நிலைக்குமேல் இவை நாலடி நின்றனவாதலால் 'நாலடியார்' என்று வழங்கலாயிற்று' என்பாரும் எனக் கொள்கை

---

* "அறவிய லிருவகைத்தா மவை தம்முட்
டுறவே ழில்லற மிருமூன் றென்ப"

† "பொருளியல் வகையே புலப்படக் கிளப்பி
னரசிய லேழதி கார மாகு
நட்பிய றொன்கே நண்ணுதலை யின்ப
மூன்றே துன்ப வியலதி கார
நான்கே யொன்றே பொதுவியல் பகையியல்
கூறதி கார நான்கே பன்னெறி
கூறதி கார மொன்றெனக் கிளப்பர்"

‡ "கடையின்ப வகைதான் கருதி னிருவகை
யின்பதுன்ப வதிகார மொன்றே யேனை
யின்பங் கூறதிகார மிரண்டே"

வேறுபட்டோர் பலருளர். இந்நூலைப்பற்றிய வேறு பல மாறுபாடுற்ற கன்னபரம்பரைச் செய்திகளும் கேட்கப்படுகின்றன.

படினும், "இந்நூல், பதுமனார் என்பவர் தொகுத்த தனிப்பாடற் றிரட்டு; அவர் பழைய சைனநூல்களினின்று அம்மதக்கொள்கைகள் நீங்கிய நீதிமொழிகளை, இளம்பூரணர், பேராசிரியர், பரிமேலழகர், * அடியார்க்குநல்லார், கல்லாடர், சேனாவரையர் முதலானவரும், † வீரசோழிய உரையாசிரியரும் பிறநூலாசிரியரும் கையாண்டவாறு, சேரத்திரட்டிப் பொருள் வழியே பாகுபாடுசெய்து இவ்வாறு அமைத்தனர்" என்பது வெளியாகின்றது. ஆயினும், பதுமனாரைப்பற்றி யாதும் விளங்கவில்லை. கடவுள்வாழ்த்துப்பாடியவர் அவராயின் அவரும் சைனராதல் வேண்டும்; நூலை வகுத்த வகையினின்றும் துறவறத்தை முன் வைத்துக் காமத்துப் பாலுக்கு ஒருபது பாடலையே அமைத்துக் கொண்டதினின்றும், இவரைச்சைனராகக்கொள்ளுதல் தக்கதெனத்தோற்று கின்றது.

இவ்வாறு தொகுக்கப்பட்ட நூல், ஒரு காலத்துக் கவிஞர் செய்த தன்று என்பதற்குத் தக்க காரணம் வேண்டும். பதுமனார் சங்ககாலத் துக்கு மிகப்பிந்தியவராக ‡ இருப்பின், அவர் தமது காலத்திற் சங்க நூல்களென்று கொள்ளப்பட்டவற்றினின்றும் இந்நூலைத் தொகுத் திருப்பாராயினும் சிற்சில பிழைகள் நேர்ந்திருக்கக் கூடும்; கடைச் சங்கத்தினின்று நூல் பல பெருகிச் செழித்த நாட்கள் சென்றபின் வந்த பெரியார் அந்நூல்களிற் சிறப்புற்றனவற்றைத் தொகுத்துக் கணக்கிடுவது பொருத்தமேயாம். அவ்வாறான மூலநூல்களுக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னரே தொகைநூல்கள் தொகுக்கப்படுவன. தொகுத்தவர் காலத்தைக்கொண்டு மூலநூல்களின் காலத்தை அறி வது சிரம சாத்தியமாகும்.

நாலடி 200, 296 ஆம் § பாடல்களிற், 'பெருமுத்தரையர்' என் பவர் பாராட்டப்படுகின்றனர். அவர் ஒருவரோ பலரோ என்பதிற்

---

* இவரைப் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்தவர் என்ப; செந்தமிழ். Vol. IV : pp. 401—403.

† கி - பி 1064 - 1070 ல் வீரசோழன் பெயரால் இயற்றப்பட்டது வீர சோழியம்; செந்தமிழ். Vol. X : p. 287.

‡ கி - பி. 14 ஆம் நூற்றாண்டில் இருந்தவராகக் கருதப்படும் நச்சினார்க்கினி யருக்கு இவர் முற்பட்டவர்.

§ "பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங் கருனைச்சோ றார்குவர் கயவர்", "நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே, செல்வரைச்சென்றிரவா தார்".

கருத்து வேறுபாடுகள் உள்ளன. சிலபாண்டியஅரசர்க்கும், சில பல்லவ அரசர்க்கும், வேறு சிற்றரசர்க்கும் 'முத்தரையர்' என்ற பட்டப்பெயர் இருந்ததென்றுதெரியவருகின்றது. இம்மூவகையினரில் எவரைக்குறிப்பன இப்பாடல்கள் என்று அறியவழியில்லை. முடியுடைமன்னர் மூவரையுமே பொதுப்படக் குறிக்குமோ என்ற ஐயமும் நிகழ்கின்றது. பெருமுத்தரையர் காலம் விளங்கினும், 200, 296 ஆம் பாக்களின் காலம் விளங்குமேயன்றி, 'மற்றைய பாக்கள் சங்ககாலத்தன அல்ல' என மறுத்தற்கு இயலாது. பெருமுத்தரையர், பதுமனார் காலத்து மன்னராயின் அவர்களது வம்சத்தைச் சிறப்பித்துக் கூறும் பாக்களைச் சரிவர ஆராயாமல், 'சங்ககாலத்தன' என்று கொண்டு சேர்த்திருக்கலாம். சங்ககாலத்தில் * பெருமுத்தரையர் என்ற பெயர்கொண்டவரே இல்லை என்று உறுதி கூறுவதற்குச் சங்ககாலமுழுமையும் நமக்கு இப்பொழுதினும் தெளிவாக விளங்கவேண்டுமன்றோ? புகழ்படைத்த ஏனைய நூலாசிரியரும் உரையாசிரியரும் கையாண்ட பாக்களையேனும் சங்க காலத்தன என்று கொள்ளுதல் அவசியமாகும்; ஏனெனில், அவர்கள் சங்கநூல்களை யன்றிப் பிற்காலத்து நூல்களினின்றும் மேற்கோள் காட்டுவது வழக்கமில்லையாதலின்

வடமொழிச் சுலோகங்களின் கருத்தை ஒட்டினவாகச் சிற்சில பாடல்கள் நாலடியாரிற் காணப்படுகின்றன; † ஆயினும், அவை மொழிபெயர்க்கப்பட்டவை என்று சொல்லமுடியா. தமிழ்நாட்டுச் சைன முனிவரிற்பெரும்பாலாரும் இருமொழியினும் தேர்ந்தவர். அவரே இருமொழியினும் (வடமொழி, தென்மொழி) ஆக்கியிருக்கலாம். ஒன்றினின்றொன்று மொழிபெயர்க்கப்பட்டுமிருக்கலாம். வடமொழிச் சுலோகங்களைச் செய்த புலவரின் காலதேசவர்த்தமானங்கள் விளங்காதிருக்கையில் எவ்வித முடிவுக்கும் வரக்கூடாது என்பது ஒருதலை. "பர்த்ருஹரி" என்பவர் காலம் தெரிந்ததே (கி - பி. 651); அவரது 'முந்நூறு' சுலோகங்களிற் சிலவற்றைத் தழுவிய பாடல்கள் நாலடியாரிற்காணப்படுகின்றனவே; ஆகையால் நாலடியார், பர்த்ருஹரிக்குப் பிற்பட்ட நூலன்றோ? என்பர் ‡ சிலர்; வேறு சிலர் "பர்த்ருஹரியும் தொகை

---

* Vide Reports On Epigraphy, Para 9 of 1896—97: Paras 19—22 of 1898—9; Para 22 of 1906—7 and South Indian Reports by Dr. E Hultzsch. Vol. 1. Page, 11

†பஞ்சதந்திரம் (கி பி. 531-72), சார்ங்கதரபத்ததி, கி-பி 1063. (செந்தமிழ், தொகுதி, 10; பக்கம், 285)

‡ செந்தமிழ், தொகுதி, 10; பக்கம், 230-36,281-85.

நூல் தொகுத்தவரே ; அவரது 'மூந்நூறு' சுலோகங்களிற் பல தொன்று தொட்டு வழங்கி வந்தனவே * நீதிநூல் தொகுத்த அவர் சைனரின் தென்மொழி நூல்களைக் கற்றுணர்தல் இயலாதோ? அன்றி, பேரறிவும் சொன்னயமும் ஒருவர் பக்கல் இருப்பனவோ? பலமொழிகளுக்கும் பொதுவல்லவோ? தனித்தனி ஒருபொருள்பட இருவர் எழுதுவதும் அசாத்தியமோ? என்று சமாதானங்கூறுவர். மற்றொருவர் † ஐந்தாம் நூற்றாண்டில் அரசுபுரிந்த வச்சிரநந்தி என்னும் சைனனது சங்கத்து நூலாக இருக்கலாமோ இந்நாலடியார் என்ற ஐயத்தையும் மேற்கொள்கின்றனர்.

இந்நாலடியார் முற்றும் பிற்காலத்து வாக்கன்று; சிற்சில இடங்களிற் பதுமனார் சோர்வுற்றிருப்பினும் அவர் சங்ககாலநூல்களினின்றுமே அநேகமாய்த் தொகுத்திருக்க வேண்டும். 'உண்மையாதேனுமாகுக' என்றுகொண்டு " நாலுமிரண்டுஞ் சொல்லுக் குறுதி " என்றும், "பழகுதமிழ்ச், சொல்லருமை நாலிரண்டில்" என்றும்,

" நாலடி வள்ளுவ ராமேயிப் பாலை நடந்தபெருங்
காலடி மேலடி மானடி யேகட் டுரலிற் பட்ட
பாலடிசில் வெண்ணெ யுண்டோ னரங்கன் பனிவரையில்
வேலடி முள்ளுக்குப் பாயமிட் டேகும் விரகு நன்றே " என்றும்

குறளோடு ஒப்பவைக்கப்பட்ட இப்பாடல்கள் மிகச் சிறந்த நூலாசிரியராலும் உரையாசிரியராலும் எவ்வாறு பாராட்டப்பட்டன என்பதை ஈங்கு எடுத்துக் காட்டிய குறிப்புகளினின்றுவது உணர்ந்து இச்சிறப்புற்ற நூலைக்கற்பது அவசியமென நாம்தெளிவுறல் வேண்டும்.

வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோர்கள்
எல்லாருங் கூடி யெடுத்துரைத்த—சொல்லார்ந்த
நாலடிநா னூறு நன்கினிதா வென்மனத்தே
சீலமுட னிற்க தெளிந்து.

என்று வழுத்தித் தமிழ்மக்கள் முன்னாளில் இந்நூலையே முதற் பாடமாக இளமையிற் கற்று வந்தனராம்; அவ்வாறே தற்கால மாணவரும் இனிது கற்றுணருமாறு பல பிரதிகளுடன் ஆராய்ந்து மேற்கோள்விளக்கம் அரும்பதஅகராதி முதலியன அமைத்து எனது நண்

* தமிழ்வரலாறு, பக்கம், 33.

† தமிழ்வரலாறு, பக்கம், 35.

பர் பதிப்பித்திருக்கின்றனர். இவர் முயற்சியீடேறும் வண்ணம், தமிழுலகத்தார் ஒவ்வொருவரும் தத்தமக்கு இயன்ற அளவு மன மொழி மெய்களால் உதவி புரியுமாறு வேண்டுகின்றேன். இதைப் போலவே பழைய தமிழ்நூல்கள் பலவற்றை ஆராய்ந்து உரைகண்டும், புதுநூல்கள் இயற்றியும் தமிழ்மக்களுக்கு உதவும்படி என் நண்பருக்கு வேண்டிய ஊக்கமும் ஆயுளும் செழுமையும் மன முவப்ப அருளுமாறு கடவுளைப்பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம் :

வே. நாராயணையர், M.A., M.L.,
Advocate.

"சுந்தரவிலாசம்"
மயிலாப்பூர்
25—5—24.

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அகநா, அகம் - அகநானூறு.
அசை - அசையோத்து.
அடியார் - அடியார்க்குநல்லாருரை.
அதி - அதிகரணம், அதிகாரம்.
அம்பிகாபதி - அம்பிகாபதிக்கோவை.
அயோத்தி - அயோத்தியாகாண்டம்.
அரசாட்சி - அரசாட்சிப்படலம்.
அரசு - அரசாட்சிச்சருக்கம்.
அலங்கார - அலங்காரப்படலம்.
அவிரோதவுந்தியார்.
அறநெறி - அறநெறிச்சாரம்.
ஆசீவக - ஆசீவகவாதச்சருக்கம்.
ஆத்திசூடி
இடை - இடைச்சொல்லியல்.
இரத - இரதநூபுரசக்கரவாளச்சருக்கம்.
இராமாவதாரம்.
இ. கொ - இலக்கணக்கொத்து.
இ. வி - இலக்கணவிளக்கம்.
இளம் - இளம்பூரணம்.
இறை - இறையனாரகப்பொருள்.
இனியது - இனியதுநாற்பது.
இனியவை - இனியவைநாற்பது.
உபகாரப் - உபகாரப்படலம்.
உவம - உரிமவியல்
உரி - உரிச்சொல்லியல்.
எச்ச - எச்சவியல்.
ஏலாதி
ஒழிபு - ஒழிபியல்.
கந்த - கந்தபுராணம்.
கம்ப - கம்பராமாயணம்.
கல் - கல்லாடருரை.
கலி - கலித்தொகை
கலிங்க கலிங்கத்துப்பரணி.
காசிகண்டம்
களவு - களவியல்
காஞ்சி - காஞ்சிப்புராணம்.
கிளவி - கிளவியாக்கம்.
கிளைகண்டு - கிளைகண்டுநீங்குபடலம்.
குசேலோபாக்கியானம்.
குண்டலகேசி.
குற்றியலுகரம் - குற்றியலுகரப் [புணரியல்.
குறள் - திருக்குறள்.
குறுந்திரட்டு.
கொலைமறுத்தல்.
கொன்றைவேந்தன்.
சந்தவிருத்தம் - திருச்சந்தவிருத்தம்.
சிதம்பரப்பாட்டியல்.
சிலப் - சிலப்பதிகாரம்.
சிவஞானசரிதை.
சிவஞானநிலயம.
சிவஞான போதமாபாடியம்.
சிறுபஞ்ச - சிறுபஞ்சமூலம்.
சீவக - சீவகசிந்தாமணி.
சூ - சூத்திரம்.
சூளா - சூளாமணி.
செய் - செய்யுளியல், செய்யுளோத்து.
சே - சேனாவரையம்.
சோணசைல - சோணசைலமாலை.
தக்கயாகப்பரணி.
ஞானவாசிட்டம்.
ஞானாமிர்தம்.
தண்டலை - தண்டலையார்சதகம்.
தண்டி - தண்டியலங்காரம்.
திருச்சிற் - திருச்சிற்றம்பலக்
கோவையார்.
திருநூற்று - திருநூற்றந்தாதி.
திருவாய்மொழி.
திருவிளை - திருவிளையாடற்புராணம்.
துறவு - துறவுச்சருக்கம்.
தொடை - தொடையோத்து.
தொல் - தொல்காப்பியம்.
தோன்றி.
ந - நச்சினார்க்கினியம்.
நல்வழி.
நறுந்தொகை.
நன். மயிலை - நன்னூல் மயிலைநாதருரை.
நன். வி - நன்னூல்விருத்தியுரை.
நன்னெறி.

நாடு - நாட்டுப்படலம்.
நாலடி - நாலடியார்.
நான்மணி - நான்மணிக்கடிகை.
நீதிநெறி - நீதிநெறிவிளக்கம்.
நீதிவெண்பா.
நீலகேசி - நீலகேசித்தெருட்டு.
நேமி - நேமிநாதம்.
நைடதம்.
பட்டினத்தார் - பட்டினத்தார் பாடல்.
பதி - பதிகம்.
பரிமேல் - பரிமேலழகருரை.
பழ - பழமொழி.
பழியஞ்சின - பழியஞ்சின
திருவிளையாடல்.
பன்னூற்றிரட்டு.
பாரதவெண்பா.
பி. ம் - பிரதிபேதம்
பிரயோக - பிரயோகவிவேகம்.
புணரியல்.
புறத்திணை - புறத்திணையியல்.
புறநா, புறம் - புறநானூறு.
பெருங் - பெருங்கதை.
பெரியதிருமொழி.
பெருந்தேவனார்
பெரும்பாண்- பெரும்பாணாற்றுப்படை.
பேர் - பேராசிரியம்.
பொருந - பொருநராற்றுப்படை.
பொருளியல்
மணி - மணிமேகலை.
மதுரை - மதுரைக்காஞ்சி.
மந்திரமாலை - திருமந்திரமாலை.
மரபு - மரபியல்.
முதுமொழிக்காஞ்சி.
முருகு - திருமுருகாற்றுப்படை.
மூதுரை.
மெய்ப்பாடு - மெய்ப்பாட்டியல்.
மேருமந்தரம் - மேருமந்தரபுராணம்.
மேற் - மேற்கோள்.
மோகவதைப்பரணி.
யா. கா - யாப்பருங்கலக்காரிகை
யாப்பு - யாப்பதிகாரம்.
யா. வி - யாப்பருங்கலவிருத்தி
வளையாபதி.
விநாயக - விநாயகபுராணம்.
வி. பா - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.
வினை - வினைச்சொல்லியல்.
வீர - . வீரசோழியம்.
வெங்கைக்கோவை.
வெற்றிவேற்கை.
வேள்வி - வேள்விப்படலம்.
வைராக்கியசதகம்.

உ

ஸ்ரீ:

நாலடியார்

கடவுள்வாழ்த்து.

வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை — யாநிலஞ்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று.

1. "வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்: இது செய்யாவென்னும் வினையெச்சம்" (தொல். வினை. சூ. 33 - பேர்); கட்டளையொரூஉமோனைத் தொடைக்கு (தொல். செய். சூ. 92 - ந) மேற் கோள்.

2. கானிலந் தோயாக் கடவுள் : "பாரணையாவடி" (திருநூற்று. 91) எனப் பிறர் கூறுதலும் காண்க.

1-2. தம்மொடு தாம் வந்த கட்டளையடியெதுகைக்கு (தொல் செய். சூ, 93 - ந) மேற்கோள்.

3. சேர்தல் - இடைவிடாது நினைத்தல் ; "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்" (குறள். 3) என்பதற்குப் பரிமேலழகர் எழுதிய விசேட வுரையைப் பார்க்க.

மூ. தேவர்களின் தோற்றத்திற்கு இந்திரவில்லை உவமைகூறுதல்மரபு; இதனை, "திருவி லிட்டுத் திகழ்தரு மேனியன்............பெருவிறல் வானவன்" (சிலப். 15 : 156 - 160); "திருவி லிட்டுத் திகழ்தரு மேனியன்" (மணி. 6 : 10) "அந்தரப்பே ருலகத்து ளமரரைமற் றறையுங்கா, லிந்திரவில் லெனவெளிப் பட் டிமையவர்க டொழுதேத்தச், சுந்தரநன் மணிப்படிவ மெனச்சுடர்ந்து தோன்றுவரே" (சூளா. துறவு. 209) ; "மற்றவன் றேவனாகி வானிடு சிலையிற் றோன்றி" (சீவக.951) "நூல்கள், இந்திரவில் இன்னவாறு தோன்றுமென்ற அது தோன்று முறைமை கூறுவாகலின், அங்ஙனந் தோன்றுகின்ற தேவர்க்கு அஃது உவமையாயிற்று ; இக்கருத்தானன்றே 'வானிடு வில்லின் வரவறியா' என்றார் பிறரும்" (ஷை. ஷை உரை) ; "வானிடு வில்லின் வரவறியாத வகையன்" (நீல கேசி. ஆசீவக. 26), "வானத்து [illegible] போல இன்னவாறு வந்ததென்றறியாமற்றோன்றுவனெம்முடைய ஆப்தன்" (ஷை. ஷை. உரை) என்பனவற்றாலறிக. இவ்வுவமைக்குக் கூறப்பட்டுள்ள காரணம் ஈண்டறிந்து இன்புறற்பாலது. கடவுள்வாழ்த்தின் வேறுபாடுகளுள் ஒன்றற்கு (தொல். செய். சூ. 109 - ந) மேற்கோள்.

நூல்

முதலாவது, அறத்துப்பால்

துறவறவியல்

முதலாம் அதிகாரம், செல்வநிலையாமை.

1. *அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட*
மறுசிகை நீக்கி யுண்டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

1. அளவடிக்கு (தொல். செய். சூ. 32 - பேர்) மேற்கோள்; அறுசுவை யுண்டி : (நன் - மயிலை. சூ. 453) மேற்கோள்.

2. சிகை - பிடிஅளவுகொண்ட உணவு; "இருசிகையு முண்டீரோ" (நாலடி. 18 : 2). மறுசிகை நீக்கியுண்டல் - முதற்சிகையைமாத்திரம்புசித்தல்; செல்வர் தமக்குப் படைத்த உணவுப்பொருள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிடி யெடுத்துண்டு மிச்சத்தை எச்சிலென நீக்குதல் மரபு; "தன்னெச்சி லுண்ணுத் தகைமையான்" (பாரதவெண்பா, 311) என்பதும் இதனை வலியுறுத்தும்.

மூ. இச்செய்யுளுடன், நாலடி. 289 - ஆம் செய்யுளும், "முல்லைமுகை சொரிந்தாற்போன் றினியபாலடிசின் மகளிரேந்த, நல்லகருனையா னுள்வாயும் பொற்கலத்து நயந்துண்டார்க, ளல்லலடைய வடகிடுமி னேட்டகத்தென் றயில்வார்க் கண்டுஞ், செல்வநமரங்கா ணினையன்மின் செய்தவமே நினைமின்கண்டீர்" (சீவக 2623); "ஆமின் சுவையவை யாறோ டடிசிலுண் டார்ந்தபின், றூமென் மொழிமடவா ரிரக்கப் பின்னுந் துற்றுவா, ரீமி னெமக்கொரு துற்றென் றிடறுவ ராதலிற், கோமின் றுழாய்முடி யாதியஞ் சோதி குணங்களே" (திருவாய்மொழி 4. 1 : 7), "சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோ, ரறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்" (வெற்றிவேற்கை) என்பனவும் ஒப்பிடற்பாலன.

இச்செய்யுளை, ஒருநோக்காக ஓடிய நோக்கிற்கும் (தொல். செய். சூ. 104), நேரிசைவெண்பாவிற்கும் (ஷை. ஷை. சூ. 118) மேற்கோள் காட்டுவர் இளம்பூரணர்.

2. *துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்*
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

1. துகடீர் பெருஞ்செல்வம் - குற்றம் நீங்கிய மிக்க பொருள் = தருமவழியில் தேடிய பொருள்.

2. பகடு நடந்த கூழ் - எருதுழுதலினாலுண்டாகிய உணவுப்பொருளை; இரண்டாம்வேற்றுமைத்தொகைக்கு (தொல். எச்ச. சூ. 17 - ந) மேற்கோள்.

1 - 2. "படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணு, முடைப்பெருஞ் செல்வர்" (புறநா. 188); "அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா, லற்குப வாங்கே செயல்" குறள், 333.

மு. "துகடீர் பெருஞ் செல்வந் தோன்றியக்காற் றொட்டு' எனவும்........ எனவும், இந்நால்வகைச் செய்யுட்கண், முடியுந் துணையும் அடிதோறுங் குறித்த பொருளை முடிய நாட்டியவாறு காண்க" (தொல். செய். சூ. 78 - ந); தனிச் சொலின்றி ஒருவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பாவிற்கு மேற்கோள் காட்டுவர் யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரும் காரிகையுரையாசிரியரும் (யா - வி. செய். சூ. 7; யா - கா. செய். 4); "சென்றோர் முகப்பப் பொரு ளுங் கிடவா, தொழிந்தவ ரெல்லா முண்ணாதுஞ் செல்லார்" கலி. 18.

3. யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரு—மேனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

2. "'சேனைத்தலைவராய்' என்னும் பாட்டுப்போல ஆயென்னுஞ் 'சன்' கொடுத்து விரவாவினையெச்சமாக்குவர்" (பிரயோக. சூ. 39), "'சேனைத் தலை வராய்' என்பனபோலநின்றன கெடுதல்விகாரப்பட்டுநின்றனவென்பாரும், ஆயென்னுமொழி வருவிக்க வேண்டுமென்பாருமுளர்" இ - கொ. சூ. 89 - உரை.

1 - 2. நாலடி. 21 : 1 - 2; "அலகுடன் விளங்கு மம்பொற் குடைநிழ லரசர்சூழ, வுலகுடன் வணங்க வோடை யுயர்களிற் றெருத்த மேலாற், பலகுடை பணியச் செல்லும் பண்பிது" சூளா. துறவு. 4.

2-3. மேனைவினையுலத்தல் - நல்வினை உதவுதலால்; மேனை......வீழ்வர்: "நல்வினை, தீர்விடத்து நிற்குமாந் தீது" (நாலடி. 51); "முதிர்வினை நுங்கட்கு முடிந்த தாகலின்" (சிலப். பதி. 45) என்பதனுரையில் "மேனை, வினையுலப்ப" என்னும் இப்பகுதியை மேற்கோள் காட்டுவர் அடியார்க்குநல்லார். [மேனை வினை - பழவினை; 'மேல' என்பது 'மேன' (இறை. சூ. 60) எனவருதல் போல்வந்தது.

மு. "உய்ம்மின் றிறைகொணர்ந்தென் றுலகாண்டவ ரிம்மையே, தம்மின் சுவை மடவாரைப் பிறர்கொள்ளத் தலம்விட்டு, வெம்மி னொளிவெயிற் கானகம் போய்க் குமை தின்பர்கள்," (திருவாய்மொழி, 4:1:2), "குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர், நடைமெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்", "குன்றத்தனை யிருநிதியைப் படைத்தோ, ரன்றைப் பகலே யழியினு மழிவர்" (வெற்றிவேற் கை). திருநூற்றந்தாதி, 44 ஆம்பாட்டு உரையில் இச்செய்யுள் முற்றும் மேற் கோளாகக் காட்டப்பெற்றிருக்கிறது. "தானைசூழ மண்ணுலகை யர்ண்டழிபவ

ரென்பதற்கு உதாரணமாகக் கூறுவர் (வைராக்கிய சதகம், 6 - உரை) இச் செய்யுளுக்கு அரிச்சந்திரசரிதையும் மன்மதன்மனைவியாகிய இரதியைச் சம்பரா சுரன் கைக்கொண்டகன்றதும் உவமைகளாம்.

4. நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

1 - 2. "நின்றன நின்றன......... செயிற்செய்க' என்றவழி நின்றன பலவாதலின் அடுக்கிவந்தசொல்லும் பொருள்குறித்துநின்றது" தொல். எச்ச. சூ. 26-பேர்.

4. இவ்வடி, விரைவின்கண் ஒருசொல்லடுக்கி வந்ததற்கும் (தொல். எச்ச. சூ. 15 - ந; இ-வி. சூ. 346), அல்வழிச்சந்தியுள், அடுக்குத்தொடருக் கும் (ஷை. சூ. 54) மேற்கோள்; "கூற்று - வாழ்நாள் இடையறுது செல்லும் காலத்தினைப் பொருள் வகையாற் கூறுபடுத்தும் கடவுள்" (தொல். புறத்திணை. சூ. 24) என்பர் நச்சினார்க்கினியர்.

3 - 4. தெளிவுபற்றி, நிகழ்காலமும் எதிர்காலமும் இறந்தகாலத்தால் வந்த மைக்கும் (தொல். வினை. சூ. 48 - பேர்), சதிர்ப்பிரத்தியயத்தில் முற்றுச் சொல் அடுக்கி வந்ததற்கும் (பிரயோக. சூ. 39 - உரை) உவப்புக்கும் (நேமி. சொல். 10) மேற்கோள்.

மூ. "காலைச் செய்வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச் சாலச் செய் வாரே தலைப்படுவார் - மாலை, கிடந்தா னெழுத லரிதான் மற்றென்கொ, லறங் காலை செய்யாத வாறு" (அறநெறி. 67) என்பதை ஒப்பிடுக.

5. என்னுனு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னுவ தென்று § பிடித்திரா—முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடிறீக் கூற்றந்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

2. இரா - இராமல்; "பின்னுவ.........முன்னே : இது கட்டளை ஒரூஉ முரண்" தொல். செய். சூ. 95 - ந.

3. கோடு இல் தீக்கூற்றம் எனப் பிரிக்க.

4. தொடுத்து - கட்டி ; "நார்த்தொடுத் தீர்க்கிலென்" (நாலடி. 26) என் புழியும் காண்க.

மூ. குறள், 36.

(பி - ம்) § 'பிடித்திரார்'

6. இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் ‡ குதித்துய்ந்தா ரீங்கில்லை—யாற்றப்

பெரும்பொருள் வைத்தீர் வழங்குமி னாளைத்
தழீஇந்தழீஇந் தண்ணம் படும்.

2. குதித்தல் - தப்புதல்; "கூற்றங் குதித்துய்ந்த நாவாரோ வில்" (பழமொழி, 183); "கூற்றங் குதித்தலுங் கைகூடும்" (குறள். 269); "கூழைமை பயின்ற கூற்ற வாசனைக் குதிக்குஞ் சூழ்ச்சி, பாழியந் தடக்கை வேந்தே பயின்றிலம் யாங்க ளென்றார்" (சூளா. துறவு. 18) என்னுமிடங்களிலும் காண்க.

3 - 4. நாளை......படும்: "சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலா, நின்றநாள் யார்க்கு முணர்வரிது" (அறநெறி, 69) தண்ணம் - பிணப்பறை; தண்ணுமை விகாரப்பட்டது.

மூ. இச்செய்யுளுடன், "கோட்டு நாளிட்டுக் குறையுணர வாராதால், மீட்டொருநா ளிடையுந் தாராதால் - வீட்டுதற்கே, வஞ்சஞ்செய் கூற்றம் வருதலா னன்றாற்றி, யஞ்சா தமைந்திருக்கற் பாற்று" (அறநெறி. 109) என்பது ஒப்பிடற்பாலது.

(பி - ம்) ‡ 'குதித்துய்ந்தீ ரீங்கு'

7. தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணு—மாற்ற
வறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் * பிறவாதா ரில்.

1. தோற்றஞ்சால் - விளக்கமமைந்த; "தோற்றஞ்சால் தொகு பொருள்" (கலி. 17) என்புழியுங் காண்க.

1 - 2. தோற்றஞ்சால்......அளந்து: "வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்" (நாலடி. 22).; "நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும், வாளதுணர் வார்ப்பெறின்" (குறள், 334), "வாள்களாகி நாள்கள் செல்ல" (சந்தவிருத்தம், 112) எனப்பிறர் கூறியிருத்தலும் காண்க.

3. அறமாவது, மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்; அருளாவது, தொடர்புபற்றாது இயல்பாக எல்லாவுயிர்களிடத்துஞ் செல்வதாய கருணை; "அறஞ்செய் தருளுடையாராதல்" (பழ. 215), "அறனு மருளுடையான் கண்ணதேயாகும்" (சிறுபஞ்ச), "அருளிலார்க் கவ்வுலகமில்லை" குறள், 247.

(பி - ம்) * 'இறவாதாரில்'

8. செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வ—† மெல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

1. செல்வுழி : நாலடி. 154 : 1 ; 230 : 3 ; 238 : 3 ; "செல்வுழி, உண்புழி' என்பன வினைத்தொகையென மறுக்க" (தொல். புணரியல், சூ. 38 - ந), 'தேய்விடத்து' (நாலடி. 51) என்பதிலும் காண்க.

(பி - ம்) † 'எல்லக்'

9. உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
றுன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
விழந்தானென் றெண்ணப் படும்.

1. 'ஒளி' என்பதற்கு, 'தானுளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை' எனப்பொருள் கூறி, 'ஒளிநிறா னோங்குபுகழ் செய்யான்' என்னு மிப்பகுதியை மேற்கோள் காட்டுவர் பரிமேலழகர் (குறள். 971), "ஒளி - தாம் உளராய காலத்து எல்லாரானும் நன்கு மதிக்கப்படுதல்", "ஒளி - உறங்கா நிற்கவும் தாம் உலகங் காக்கின்ற அவர் கடவுட்டன்மை" ௸ 659, 698 - பரிமேல்), 'வெள்ளைமையின்மை' என்பர் (தொல். பொருளியல், சூ. 53) நச்சினார்க்கினியர். புகழ்-இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகின் நிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி ; குறள், 24 - அதி. பரிமேல்.

2 - 3. கொன்னென்னுமிடைச்சொல் பயனின்மையாகிய பொருட்கண் வந்ததற்கு மேற்கோள் ; நேமி. 53 - உரை.

3 - 4. அஆ........எண்ணப்படும் : ஆகாரவிடைச்சொல் இரக்கக் குறிப்பு உணர்த்தியதற்கும் (தொல். இடை. சூ. 34 - ந) அஆ என்பது அருளின் கட்குறிப்பு உணர்த்தியதற்கும் (நன் - மயிலை. சூ. 420 ; நன் - வி. சூ. 421 ; இ - வி. சூ. 279) குறிப்பின்கண், தனிக்குறில் விட்டிசைத்து மொழிமுதலில் நேரசையாய் வந்ததற்கும் (தொல். செய். சூ. 10 - பேர்; ந; யா - வி. அசை. சூ. 7 ; யா - கா. ஒழிபு. 2 ; இ - வி. சூ. 743) மேற்கோள்.

10. உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி.

1. செற்றும் - செறுத்தும்.

௫. "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்ற முதுமொழியை ஒப்பிடுக.

இரண்டாம் அதிகாரம், இளமைநிலையாமை.

11. நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னா விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
யின்னாங் கெழுந்திருப் பார்.

1. என்றென்னுமிடைச்சொல், வினைப்பொருண்மைகுறித்து வருவதற்கு மேற்கோள்; தொல். இடை. சூ. 11 - சே; ந; இ - வி.சூ. 255..

1-2. "திறைமன்ன ருய்ப்பத் திருநிற்பச் செங்கோ னடப்பக், குறைவின்றிக் கொற்ற முயரத் தெவ்வர்தேர் பணிய, வுறைகின்ற காலத் தறங்கேட் டுருமுற்ற பாம்பி, னறிவன் னடிக்கீ ழரசஞ்சித் துறந்த வாறும்" (சீவக. 27) என்பதும், "தலைவனும் தலைவியும் மூப்புவருவதன் முன் துறப்பார்" (கலி. 22 - ந) என்பதும் ஈண்டறிதற்பாலன.

2-3 பெயரெச்சம் உடனடுக்கி வந்து முடிந்ததற்கும் (நேமி. 46 - உரை) மறையாயடுக்கி வந்ததற்கும் (இ - கொ. சூ. 120; பிரயோக. சூ. 39- உரை) 'புரைதீரா, மன்னாவிளமை' என்பது மேற்கோள்.

4. இன்னாங்கு, ஒருசொல்; 'பட்டாங்கு' என்பது போல.

மு. "வேண்டி னுண்டாகத் துறக்கத் துறந்தபி, னீண்டியற் பால பல" குறள், 342; சிறுபஞ்ச. 24.

12. நட்புநா ரற்றன நல்லாரு மஃகினா
ரற்புத் தளையு மவிழ்ந்தன—வுட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
யாழ்கலத் தன்ன † கலுழ்.

1. நல்லார் - மகளிர்; "நல்லா, ருடன்படிற் றானே பெருகும்" என்றார் பிறரும்.

2. அற்புத்தளை : மென்றொடர்க்குற்றியலுகரமொழியின் மெல்லொற்று (வேற்றுமைக்கண்ணும்) அவ்வழிக்கண்ணும் வருமொழி முதலில் வலிவந்த விடத்துக் கிளைவல்லொற்றாயதற்கு (தொல். குற்றியலுகரம். சூ. 9 - ந; நன்-மயிலை. சூ. 183; நன் - வி. சூ. 184) மேற்கோள்.

3 - 4. வந்ததே......... கலுழ்: "ஆழ்கல மாந்தர்போல வணிநக ரழுங்கிற் றன்றே", "பேதுசெய் பிணிப் பெரும்புலி பாய்ந்திடப் பிணமா, போதைமாக் கட லுடை கலத்த வருற்ற துறவே", "உயர் நாவாய், கண்ணார் கடன் மண்டிக் காற்றிற் கவிழுங்கால்......... மக்களுறுந் துன்ப, நண்ணா நரகத்தி னன்காமடி யன்றே" (சீவக. 1163,2759,2793), "கலங்கவிழ்த்த நாய்கன்போற் களைதுணை பிறிதன்றிப், புலம்புமென்னிலை" (யா - வி. செய். சூ. 33; யா - கா. செய். 12; இ - வி. சூ. 738, 'மணிகிளர்' மேற்கோள்), "காற்றத் திடைப்பட்ட கலவர்

மணம்போல, வாற்றத் துளங்கா நிற்ப ஞழிவலவா" (பெரியதிருமொழி, 11, 8: 1) என்ற இடங்களையும் நோக்குக.

(பி - ம்) † 'கலி'

13. சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறு—மிற்செறிந்து
காம நெறிபடருங் கண்ணிஞர்க் கில்லையே
யேம நெறிபடரு மாறு.

1. சோர்ந்த நடையினராய் - தம்மையறியாமல் சரீரத்திருந்து வடிகின்ற மலங்களையுடையராய்; தளர்ந்தநடையினராயென்பாருமுளர்.

2. பண்டம்-(உடலாகிய) பொருள்; "பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங், கண்டெபா ராட்டுவர்", "தம்மையோர், பண்டத்துள் வைப்ப திலர்" (நாலடி. 48, 50) என்புழியும் காண்க.

3. கண்ணிஞர் - புல்லறிவாளர்; கண் - கருத்துமாம்.

மு. "முதுகு பற்றிக் கைத்த லத்தால் முன்ஞெர் கோலூன்றி, விதிர்வி திர்த்துக் கண்சு ழன்று மேற்கிளை கொண்டிருமி, யிதுவென் னப்பர் மூத்த வாறென் றிளையவ ரேசாமுன்" (பெரியதிருமொழி, 1. 3 : 2), "ஒழுகிய நடையு நீருமுதலகை யிகப்ப ஆறு, மழுகலிவ் வள்ளல் யாக்கை யகம்புற மாயிற் றுயின், கழுகொடு கவருங் காக்கை கைதடி கொண்டுகாத்து, மழகுள சுழலுமன்னே வாயிரச் சாதி மாதோ" சூளா. துறவு. 11.

14. தாழாத் தளராத் ‡ தலைநடுக்காத் தண்டூன்று
வீழா விறக்கு மிவண்மாட்டுங்—காழில்லா
மம்மர்கொண் டமாந்தர்க் கணங்காகுந் § தன்கைக்கோ
லம்மனைகோ லாகிய ஞான்று.

2. விறத்தல் - வெருவுதல்; "விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்" (தொல். உரி. சூ. 50); இறக்குமெனப்பிரித்தலுமாம்.

1 - 2. காழ் - அறிவின்றிட்பம்; "தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி, வளைந்த யாக்கை மறையோன்" (சிலப். 15: 44 - 5; மணி. 14 : 30 - 31) என்றூர் பிறரும்.

3. மம்மர்கொள் - மயக்கங்கொண்ட. 'மாந்தர்' நித்தியபகுவ்சனமென்பார், "அறைக்கண் மாந்தனுக் கதிதியந் தொழிலினி லமைந்தார்" (சூளா. தூது. 40) என்புழி ஒருமையில் வந்ததற்கு யாது கூறுவரோ அறியேம். அணங்காகும் - காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வமாகும்; குறள், 918 - பரிமேல்.

3 - 4. தன்கைக்கோல் அம்மனை கோலாகிய ஞான்று - இவள் கையிற்றண்டு இவள்தாய் கையிற்றண்டாகிய நாளில்; [இவள் இளையாளாயிருந்தகாலத்தில்]

(நாலடி. 17). உயர்திணைப்பெயர், குறிப்பினாற் பெண்பாலொழித்து வந்தற்கு (நன் - மயிலை. சூ. 351) மேற்கோள்.

(2) விறக்குமிவண்மாட்டும் (3) மம்மர்கொள் மாந்தர்க்கு (இவள்) தன் கைக்கோல் (4) அம்மனைகோலாகிய ஞான்று (3) அணங்காகும் எனக்கூட்டுக.

மு. கருத்து: நாலடி. 17; "தாழாத்தளரா......ஞான்று" என்பது; பிறர்மாட்டு மூப்புப்பற்றி யிழிப்புப் பிறந்தது" தொல். மெய்ப்பாடு. சூ. 6 - இளம்.

(பி - ம்) ‡ 'தலைநடுங்கா' § 'தங்கைக்கோலம்மனைக்கோல்'

15. எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றா—டனக்குத்தா
யாகி யவளு மதுவானாற் றாய்த்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு.

2. தனக்கு - அவள் தனக்கு.

2 - 3. தாயாகியவளும் - தாயாயிருந்தவளும். தாய்த்தாய்க் கொண்டு—ஒரு தாய் மற்றொரு தாயைத் தேடிக்கொண்டு.

மு. "உழந்துழந்து கொண்ட வுடம்பினைக் கூற்றுண்ண, விழைந்திழைந் தெங்கணுந் தோன்றிச்—சுழன்றுழன்ற சுற்றத்தா ரல்லாதா ரில்லைகா ணன்னெஞ்சே, செற்றத்தாற் செய்வ தெவன்" (அறநெறி. 102). அளித்துலகு - ஏழையுலகு.

16. வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில்.

1. வெறியயர்தல் - ஆவேசங்கொண்டாடுதல்; "வேலன் றைஇய வெறி யயர் களனும்" (முருகு. 222), "வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து" சிலப். 24-'வேலனார்'.

2. நறுங்கண்ணி: "புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த, மலரா மாலை" புறம். 33.

3. குளகு - இலைமேயும் விலங்குணவு.

மு. இச்செய்யுளோடு, நாலடி. 331-ஆம் செய்யுள் ஒப்பிடற்பாலது.

17. பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிந்து.

2. "காய் முதிர்கனியி னூழ்த்து வீழுமிவ் வியாக்கை" சீவக. 1435.

2 - 3. மற்று - பிறகு. நனிபெரிதும்......வெங்கன்மின் : (நன்-மயிலை. சூ.397) மேற்கோள்.

4 ஊன்றுகோலாகிய கண்ணிணையுடையளாவள்; "வேற்கண் மடவார் விழைவொழிய யாம்விழையக், கோற்க ணெறிகாட்டக் கொல்கூற் றுழையதாம்" (வளையாபதி) என்னும் செய்யுளை ஒப்பிடுக.

மு. கருத்து : நாலடி. 14.

18. பருவ மெனைத்துள பல்லின்பா லேனை
யிருசிகையு முண்டீரோ வென்று—வரிசையா
லுண்ணூட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோ
ளெண்ணு மறிவுடை யார்

2. இருசிகை - மெல்லுணவும் வல்லுணவுமாகியவுணவுகள்; வலிதும் மெலிதுமாகிய கவளம் என்றுமாம்; நாலடி. 1.

19. ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையாற்
*றோட்கொட்டுக் காலத்தாற் கொண்டுய்ம்மின்—பீட்பிதுக்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன் [கிப்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

1-2. "கூற்றங்கொண் டோடத் தமியே கொடுநெறிக்கட் செல்லும் போழ்தி, னூற்றுணுக் கொள்ளீ ரழகலா லறிவொன்று மிலிரேபோலும்" (சீவக. 1550) என்பதை நோக்குக.

2. "தோட்கொட்டு - (ஆற்றுணவு); தோட்கொட்டாகிய அறங்களை; பொதிசோற்றுப்புடைவைமுடிச்சு நடக்குந்தோறுந் தோளின்கண்ணே சுழலுத லால் 'தோட்கொட்டு' என்றார்" என்பர் பதுமனார். "சிறுகாலையே தமக்குச் செல்வுழி வல்சி, யிறுகிறுகத் தோட்கோட்ப்புக் கொள்ளார்" (நாலடி. 328); "செல்கதிக், காற்றுணுப் பெருதழு தலறி வீழுமே" சீவக. 2934. பீள் - கரு; கலி. 71.

(பி-ம்) *'தோட்கோப்பு'

20. மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியா
னற்கா யுதிர்தலு முண்டு.

1. மற்றறிவாநல்வினை : "அறவினை மற்றறிவாம்" (நாலடி. 332); மற்றென்னுமிடைச்சொல் வினைமாற்றின்கட் காலம்பற்றிவந்ததற்கு (தொல்.

இடை. சூ 14-சே; பேர்; ந; நன் - மயிலை. சூ. 432; நன் - வி.சூ. 433; இ - வி. சூ. 266) மேற்கோள்.

2. *கைத்து - கையகத்தாயபொருள்* (குறள். 593) *என்று பொருள்கூறி இவ்வடியை மேற்கோள் காட்டுவர் பரிமேலழகர்; "யாதும், காவன்மின் கைத் துண்டாம் போழ்து"* (நாலடி. 92) *ஐகாரவீறு, வேற்றுமைக்கண் அத்துச் சாரியை பெற்று வந்ததற்கு.* (தொல். குற்றியலுகரம். சூ. 78-ந) மேற் கோள்.

1-2. நாலடி. 272 : 3-4; "*அன்றறிவா மென்னா தறஞ்செய்க*" குறள். 36.

3. *கனி (உதிர்தல்) ஒழிய - பழம் உதிராமலிருக்க.*

மூ. "*இளமையு நில்லா யாக்கையு நில்லா, வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா, புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்*" (மணி. 22 : 135 - 38; 28 : 98 - 9), "*மின்னு மிளமை யுளதா மெனமகிழ்ந்து, பின்னை யறிவென்றல் பேதைமை - தன்னைத், துணித்தானுந் தூங்கா தறஞ்செய்க கூற்ற, மணித்தாய் வருதலு முண்டு*" (அறநெறி. 106) *என்பன இங்கே அறியத்தக்கன.*

மூன்றாம் அதிகாரம், யாக்கைநிலையாமை.

21. *மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்*
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
*துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டார் * ரல்லா*
தெஞ்சினா ரிவ்வுலகத் தில்

1-2. நாலடி. 3 : 1-2; "*மற்றவெங்கட களிற்றி னுதயக் கிரியின்மேல் மதிக வித்திட வுதித்திடு மருக்கனெனவே, கொற்ற வெண்குடை கவிப்ப மிசை கொண்டு*" (கலிங்க. அவதாரம். 51); "*மலைமிசை......குடையர் : என அளவடியானே வெண்பா வந்தவாறு*" தொல். செய். சூ. 35-பேர்.

மூ. "*இமையவ ரமையலர்க் கடந்த, தாங்குமா வண்கைச் சக்கர மிக்குயர் பிறரும், யாங்க ளுரவ ரூரொடு பேரமக் குரையாய்!*" (சீவக. 2761), "*கொலையானை மேலோர் குளிர்வெண் குடைக்கீழ்ப், பலயானை மன்னர். பலர்போற்ற வந்தான், மலையாகம் போழாக மற்றிவனே சாய்ந்தான், நிலையாமை சால நிலைபெற்ற தன்றே*" சூளா. அரசு. 334.

(பி-ம்) * '*அல்லாவெஞ்சினார்*'

22. *வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்*
வீழ்நாள் படாஅ தெழுதலால்—வாழ்நா
ளுலவாமு னொப்புர வாற்றுமின் யாரு
நிலவார் நிலமிசை மேல்.

1. வயங்கொளி மண்டிலம் - சூரியமண்டிலம். ‘வாழ்நாட்கு அலகாகிய (எண்ணுங் கருவி) பல கதிரையுடைய செல்வன்’ (புறநா. 34 - உரை) என உரை நடையாக அமைந்திருத்தல் காண்க.

1-2. “தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலும்......அளந்து” நாலடி. 7.

3. ஒப்புரவு - யாவர்க்கும் ஒப்ப நடத்தல். : நாலடி. 37, 148; குறள். 213, 218.

23. மன்றங் கறங்க மணப்பறை யாயின
வன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
யொலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்.

1-3. “ஓரி னெய்தல் கறங்க வோரில், னீர்ந்தண் முழவின் பாணி ததும்பப், புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர், பைத லுண்கண் பனிவார் புறைப்பப், படைத்தோன் மன்றவப் பண்பிலாள, னின்னு தம்மவிவ் வுலக, மினிய காண்கித ணியல்புணர்ந் தோரே” (புறநா. 194); “மணமகனே பிணமகனாய் மணப் பறையே பிணப்பறையா, யணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகை யொலி யாய்க் கழியக், கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும் பயனை, யுணர்வுடை யார் பெறுவருணர் வொன்றுமிலார்க் கொன்றுமிலை” (திருவிளை. பழியஞ்சின 40), “மணவணி யணிந்த மகளி ராங்கே, பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ, யுடுத்த வாடை கோடி யாக, முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்” (வெற்றிவேற்கை) என்பன ஈண்டறிதற்பாலன.

24. சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை—நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

1. ஒருகால் - ஒருநிலை.

2. இவ்வடி, நன்றீற்று ஏ தீதென்னுங் குறிப்புணர்த்தியதற்கு (தொல். இடை. சூ. 34 - ந) மேற்கோள்; காண், கட்டுரைச்சுவைபட வந்தது; அசையென் பாருமுளர்.

1-2. “வெண்பாவினுள், ‘சென்றே......நன்றே காண்’ எனப் பன்னிரண் டெழுத்தடியொன்றனையும் இருகாற்சொல்லி எதுகைகொள்ளுங்கால், அடி யோடடிக்கூட்டத்துத் தளைவகை சிதையாது தொடைப்பகுதியுட்பட்டவாறு காண்க” தொல். செய். சூ. 34: பேர்; ந.

3. “சென்றேயெறிப......சுமந்து : இதனுள், நன்றேகாணென்பது தீதே காணென்னுங் குறிப்புணர்த்திற்று” தொல். இடை. சூ. 33 - பேர்.

25. கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு—மணங்கொண்டீண்
டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
டொண்டொண்டொ னென்னும் பறை.

(1) கல்லென்று (4) டொண்டொண்டொண், ஒலிக்குறிப்பு.
2. உண்டுண்டுண்டு, துணிவுபற்றி மூன் றடுக்கிவந்தது ; நன் - வி. சூ. 395.

26. நார்த்தொடுத் தீர்க்கிலென் னன்றாய்ந் தடக்கிலென்
† பாத்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
றோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்.

1. "நன்றாய்ந்தடக்குதல் — நன்றாகத் (தகனஞ்செய்து) அத்திகளைப் பொறுக்கியெடுத்து அடக்கம்செய்தல். நன்றாகஆராய்ந்து அற்றமடக்கினு லென்னை" (பதுமனார்)

2. பாத்து உழிப்பெய்தல் - (பூமியை) பகுத்து (நீளமாகத் தோண்டி) அத னுள்ளே போகட்டுப் புதைத்தல்.

3 - 4. "தோற்பையு ணின்று......புறப்பட்டக்கால்' என்னும் நாலடியா நுள், கூத்தன் - உயிர்க்கூத்தன்" பிரயோக. சூ. 49 - உரை ; அறநெறி. 219.

3. தோற்பை :— "உறுப்புக் கடாமுடன் கூடி யொன்றாயிருந்த பெரும்பை" குண்டலகேசி.

மு. ரகரவொற்றிடை வந்த ஆசிடையெதுகைக்கு (யா - வி. தொடை. சூ. 37) மேற்கோள் ; "காக்கை கவரிலென் .கண்டார் பழிக்கிலென், பாற்றுளிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென், றோற்பையு ணின்று தொழிலறச் செய் தூட்டுங், கூத்தன் புறப்பட்டுப் போனவிக் கூட்டையே" மந்திரமாலை.

(பி - ம்) † 'பார்த்துளிப் பெய்யில்', 'பாற்றுளி பெய்யிலென்'

27. படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்—தடுமாற்றந்
தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

1 - 2. "மின்னுமொக் குளுமென" (சீவக. 2754), "விண்ணுநீர் மொக்குளின் விளியும் யாக்கையை" (கம்ப. அயோத்தி. கிளைகண்டு. 79), "நீரிற்குமிழி நீர்மேலெழுத்து" (பட்டினத்தார்), "நீரிற்குமிழி பூணமைத்து நின்றாலு நில்லாமெய், பார்க்கு மிடத்திதன்மேற் பற்றுநா ளெந்நாளோ" (தாயு மானவர்), "பேனமார் வெள்ளநீரிற் பிறந்திடுங் குமிழிபோலும்" தசேலோ பாக்கியானம்.

28. யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

1. யாப்பு - உறுதி.
3. மலையாடு மஞ்சு - மலைமேலசையும் மேகம்.
மூ. நாலடி. 29.

29. புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்க வறவினை—யின்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்.
சென்றா னெனப்படுத லான்.

2 இன்னினி - இப்பொழுதே.
3 - 4. "நின்றான்.........சென்றான்' முற்றுச்சொல்லடுக்கி முடிக்கும் பெயர்|வெளிப்படாது நின்றமைக்கு (தொல். எச்ச. சூ. 33 - ந) மேற்கோள்.
மூ. தேகமநித்தியமென்பதற்குப் பிரமாணம் : (அவிரோதவுந்தியார், 20) யாக்கையாவது அநித்தியமாதலின் விரைந்தறஞ்செய்ய வேண்டுமென்பதற்குப் பிரமாணம் ; கொலைமறுத்தல், 22 - உரை.

30. கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

மூ. "அலங்க லஞ்சினைக் குடம்பைப் புல்லெனப், புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந்தாங்கு, மெய்யிவ ணொழியப் போகியவர்" (அகநா. 113), "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே, யுடம்பொ டுயிரிடை நட்பு" (குறள். 338) என்பவற்றை ஒப்பிடுக.

நான்காம் அதிகாரம், அறன்வலியுறுத்தல்.

31. அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
† தவற்றாற் றவஞ்செய்யா தார்.

1. அண்ணாத்தல் - தலைநிமிர்தல்.

3 - 4. மேலை.....செய்யாதார்: "தவமுந் தவமுடையார்க் காகும்" (குறள். 262) என்பதும், "பயனையன்றித் தவந்தானும் உண்டாவது முற்றவமுடையார்க்கே" என்னும் பரிமேலழகர் உரையும் ஈண்டறிதற்பாலன.

மூ. இச்செய்யுளுடன் "இலர்பல ராகிய காரண நோற்பார், சிலர்பலர் நோலா தவர்" (குறள். 270), "வித்தி நல்லறம் விளைந்த வதன்பயன், றுய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து,வயிறுகாய் பெரும்பசி யலைத்தற் கிரங்கி, வெயிலென முனியாது புயலென மடியாது, புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன், னறங் கடை நில்லா தயர்வோர் பலரால்" (மணி. 11: 108-13), "மாசித்திங்கண் மாசினசின்னத் துணிமுள்ளி, னூசித்துன்ன மூசியவாடை யுடையாகப், பேசிப் பாவாய் பிச்சை யெனக்கை யகலேந்திக், கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்" (சீவக. 2929), "மேலைத்தவத்தளவே யாகுமாந் தான் பெற்ற செல்வம்" (மூதுரை, 7) என்பவற்றை ஒப்பிடுக.

(பி - ம்) † 'தவத்தால்'

32. ஆவாநா மாக்க நசைஇ யறன்மறந்து
போவாநா மென்னுப் புலைநெஞ்சே—யோவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாட்கள்
சென்றன செய்வ துரை.

1. ஆவாம் - மேலாகக்கடவோம்; "ஆதுநாமென்னுமவர்" (நாலடி. 181) "ஆஅதுமென்னுமவர்" (குறள். 653) என்பவற்றை நோக்குக.

2. புலை - கீழ்மை.

33. வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை—நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

மூ. நாலடி. 52; "பண்டுருத்துச் செய்த பழவினைவந் தெம்மை, யின்றுறுக் கின்றதென வறியார்—துன்புறுக்கு, மேவலரை நோவதென்" பழ. 191.

34. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.

2. கரும்பூர்ந்த - கரும்பினை நெருக்கிக்கொள்ளப்பட்ட.

1-2. "தோற்ற மரிதாய மக்கட் பிறப்பினு, லாற்றுந் துணையு மறஞ் செய்க." (பழ. 365), "அரிதரிது மானிடராத லரிது", "மக்க ளுடம்பு பெறற்

கரிது பெற்றபின், மக்க ளறியு மறிவரிது - மக்க, ளறிவறிந்தா ரென்பா ரறத்தின் வழுவார், நெறிதலை நின்றொழுகு வார்" (அறநெறி, 212), "பரவை வெண் டிரை வடகடற் படுநுகத் துளையுட், டிரைசெய் தென்கட லிட்ட தோர் நோன்கழி சிவணி, யரைச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற், பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே" (சீவக. 2749), என்பவற்றை ஒப்பிடுக. இத் தேகம் இன்றியமையாதென்பதற்குப் பிரமாணம் : அவிரோதவுந்தியார், 20.

4. நாலடி. 106 : 4.

மு. "வினைபல வலியினாலே வேறுவே றியாக்கை யாகி, நனிபல பிறவிதன் னுள் துன்புறூஉம் பல்லுயிர்க்கு, மனிதரி னரியதாகுந் தோன்றுதல் தோன்றி னாலு, மினியவை நுகரவெய்துஞ் செல்வமு மன்னதேயாம்", "உயர்குடி நனி யுட் டோன்ற லூனமில் யாக்கையாதல், மயர்வறு கல்விகேள்வித் தன்மையால் வல்லராதல், பெரிதுண ரறிவேயாதல் பேறநங் கோட லென்றாங், சரிதினை பெறுத லேடா பெற்றவர் மக்க ளென்பார்" வளையாபதி.

35. கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

1. கட்டி - பாகு. சிறுகாலை - முற்காலம்.

2. துரும்பு - கோது.

3. உடம்பின் பயன் கொள்ளல் - தருமம் தவமுதலிய நற்காரியங்களைச் செய்து அதனாலாய இன்பத்தை நுகர்தல்.

3-4. "செய்ப வெல்லாஞ் செய்தன னாகலி, னிடுக வொன்றோ சுடுக வொன்றோ, படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் றலையே" (புறநா. 239 : 19-21) என்பதும், "அதிசோக மொடயலார்களைப் போலடுங் கூற்றம் வந்தால், மதிசோர் தரமயங் கிக்கிட வோமலர் மேனடந்தார், துதிசே ரிணையடி யாந்துணை யோடவர் தொல்லறமாம், பொதிசோ றுடைய மிடையோ மினித்தனிப் போ நெறிக்கே" (திருநூற்று. 57) என்பதும் "இதனால் உடம்பின் பயன் பெற்றோ மென்பதாம் ; உடம்பின்......பரிவதிலர், என்றுகலின்" என்னுமதனுரையும் இங்கே அறிதற்பாலன; திருநூற்றந்தாதி, 68-ஆம் செய்யுளுரையில் இவ்வடிகள் "உடம்பின் பயன் கொண்டவராதலாலே கூற்றமுட்கார்" என உரை நடையாய் அமைந்துள்ளது.

மு. மதுரைக்காஞ்சி, 632-3-ந, மேற்கோள்.

36. இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி

யொருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.

1. எட்டெழுத்தான் வந்த அடிக்கும் (தொல். செய். சூ. 54-இளம்), முற்றெதுகைக்கும் (ஷை. ஷை. ஷை-93-ந) மேற்கோள்.

3 - 4. "ஒல்லும் வகையா னறவினை யோவாதே, செல்லும்வா யெல்லாஞ் செயல்" (குறள். 33) என்பதும் "இயலுந்திறமாவது-இல்லறம் பொருளளவிற்கு ஏற்பவும், துறவறம் யாக்கைநிலைக்கு ஏற்பவும் செய்தல்" என்ற பரிமேலழகருரையும் கருதத்தக்கன.

ு. கருத்து:—"நாளைச் செய்குவ மறமெனி னின்றே, கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கு, மிதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர், முதுநீ ருலகின் முழுவது மில்லை" (சிலப். 28 : 179 - 82), "கொள்ளுங் கொடுங் கூற்றங் கொல்வான் குறுகுதன்மு, னுள்ளங் கனிந் தறஞ்செய் துய்கவே" (நன்னெறி. 30), இது பல விகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பாவிற்கு (யா - கா. செய். 5) மேற்கோள்; இருவிகற்பந்தான் வந்ததென்பர் இலக்கணவிளக்கவுரையாசிரியர் இ. வி சூ. 730

37. மக்களா லாய பெரும்பயனு மாயுங்கா
லெத்துணையு மாற்றப் பலவாற்—றொக்க
†வுடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

3. ஒப்புரவு - தக்கன ; நாலடி. 22, 148 ; குறள். 213, 218, 220.
(பி - ம்) † 'உடம்புக்கீக'

38. உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

1. உறக்குந்துணையது - [உறத்தல் - செறித்தல்] உறங்குவதுபோல அடங்கியிருப்பதாகிய; "உகிர்ப்புரை புக்கோர் தம்மை யுகிர்களா லுறக்கு மூன்றி" இராமவதாரம்.

1-2. பிறபொருளாக்கம்பற்றியவியப்பென்னும் மெய்ப்பாட்டிற்கு(தொல். மெய்ப்பாடு. சூ. 7 - பேர் ; இ - வி. சூ. 578) மேற்கோள்.

3 - 4. "பொருளளவு, தான்சிறிதாயினும்...போர்த்துவிடுமாகலின், 'இனைத்துணைத்தென்ப தொன்றில்லை' என்றுங் கூறினர்." (குறள். 87 - பரிமேல்); "தான்சிறிதாயினும்........,போர்த்துவிடும்: இஃது ஏற்றற்சிறப்பு" (தொல்

புறத்திணை. சூ. 20 - ந), "பார்த்தெதிர், வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினு, னுயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே" இராமவதாரம், வேள்வி. 35; குறள். 87, 105; திருவிளை. நாடு. 16.

மு. "உறக்குந்துணை......விடும்: என்பதனுள் உம்மை இசைநிறையாயிற்று" (தொல். இடை. சூ. 46 - பேர்), "தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை, தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினு, நுண்ணிதே யாயினு மண்ணல் யானை, யணிதேர் புரவி யாட்பெரும் படையொடு, மன்னர்க் கிருக்க நிழலாகும்மே" நறுந்தொகை.

39. வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

1. "சொல்லினென்பது - இருவழியும் மிகையாயினும், சொற்பொருட் பின்வருநிலையென்னும் அணிநோக்கிவந்தது, 'வைகலும் வைகல் வரக் கண்டும்' என்பதுபோல" (குறள். 200 - பரிமேல்), "ஒருசொல்லே மிகுத்து வருதலின் ஏந்தல்வண்ணமென்றாயிற்று; அது, 'வைகலும்......அஃதுணரார்' எனவரும்" (தொல். செய். சூ. 232 - பேர்; 6 - ந), "கூறியதுகூறன் முன்வைத்ததென்னையெனின் அது நூலுட்போலச் செய்யுட் கண்ணும் பயன்படவரின் அமையுமென்றற்கென்பது; அவை, 'வைகலும்......உணரார்' எ - ம்,...எனவும், சொல்வகையான் இரட்டித்தவாறு" தொல். மரபு. சூ. 108-பேர்; நன் - வி. சூ. 95.

4. வைகல் - நாள் கழிதற்குக் காரணமான சூரியோதய அஸ்தமனங்கள். "வைகல் நாளும் வைகின்றே" (சீவக. 156) என்பதும், 'நாள்கள்தோறும் நாள் கழியா நின்றது' எனும் நச்சினார்க்கினியர் வாக்கியமும் அறியத்தக்கன.

மு. வழிமோனைக்கும் (தொல். செய். சூ. 93-பேர்; ந), ஒருவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பாவிற்கும் (யா-வி. செய். சூ. 4; யா-கா. செய். 5; சிதம்பரப்பாட்டியல், செய். 1; இ - வி. சூ. 730), சொற்பொருட்பின்வருநிலையணிக்கும் (தண்டி. சூ. 41; வீர. அலங்கார. சூ. 28) மேற்கோள். 'இஃது அகவல்வெண்பாவென்று அணியியலுடையார் காட்டிய பாட்டு' யா - வி. செய். சூ. 4.

40. மான வருங்கல நீக்கி * யிரவென்னு
மீன விளிவினால் வாழ்வேன்மன்—னீனத்தா
லூட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

2. "ஈண விழிவினுன் வாழ்வேன் மன் : என்பது கழிவின்கண் வந்தது" நேமி. சூ. 53.

ғ. குறள், 1063 ; "மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே" (இனியது 14), "மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை, பீடழிய வந்த விடத்து", "மயிர்நீப்பின் வாழாக் கவரிமாவன்னா, ருயிர்நீப்பர் மானம் வரின்", "இளிவரின் வாழாத மான முடையா, ரொளிதொழு தேத்து முலகு" (குறள் 968-970), "தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்த, மின்னுயி ரோம்பினு மோம்புக—பின்னர்ச், சிறுவரை யாயினு மன்ற தமக்காங், கிறுவரை யில்லை யெனின்" (நீதிநெறி. 41), "இலமென்னும், வன்மையின் வன்பாட்ட தில்" "இன்னுமை வேண்டி னிரவெழுக" நான்மணி. 17,31.

(பி - ம்) * 'இவுழ்'

ஐந்தாம் அதிகாரம், தூய்தன்மை.

41. *மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்*
நோக்கார்கொ னொய்யதோர் புக்கிலை—யாக்கைக்கோ
ரீச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் ‡ சொல்.

1. மாக்கேழ் - மாமை நிறம் ; மாந்தளிர் போன்றநிறமெனலுமாம். மடம் - மென்மை. அரற்றும் - பலகாற்சொல்லும். சான்றவர் - பெரியோர் ; ஈண்டு இகழ்ச்சிக்குறிப்பு ; எதிர்மறையிலக்கணை.

2. நொய்யது - சீர்மையில்லாதது. புக்கில் - (உயிர்) புகுந்தவீடு - உடம்பு ; மோக்ஷமெனினுமமையும். [துச்சில் என்பது பாடமாயின் - ஒதுக்கிடம் என்க ; குறள். 340]

4. காக்கை கடிவதோர் சொல்.

ғ. கருத்து : "ஒழுகிய நடையு நீரு முதலைகை யிகப்ப ஆறு, மழுகலிவ் வள்ளல் யாக்கை யகம் புற மாயிற் றுயிற், கழுகொடு கவருங் காக்கை கடிதடி கொண்டு காத்து, மழகுள சுழல மன்னோ வாயிரச் சாதி மாதோ" (சூளா. துறவு. 11) என்பதை ஒப்பிடுக.

(பி - ம்) ‡ 'கோல்'

42. *தோற்போர்வை மேலுந் துளைபலவாய்ப் பொய்ம்மறைக்கு*
மீப்போர்வை மாட்சித் துடம்பானுன்—‡ மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

1-2. உடம்பு மீப்போர்வை மாட்சித்து' ஆனுல் - உடம்பு மேற்போர்த்த போர்வையால் பெருமையுடைத்து ஆதலால்.

3. அதனை - அவ்வுடம்பை.

2-3. மீப்போர்வை பொய்ம்மறையாக் காமம் புகலாது - அம் மேற் போர் வையால் உள்ளுள்ள பொல்லாங்குகளை மறைத்துக் காமநுகர்ச்சியை விரும்பாமல். காமம்புகலாகாது – காமம் புணர்துரையாது ; "காமஞ் செப்பாது" (குறுந். 21), "காமஞ் செப்பிக் கண்ணினு லிரப்பார்" சீவக. 2549.

4. பைம்மறியாப் பார்த்தல்: "மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து, மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்" (மணி. 4 : 120 - 121), "பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து" (இறை. சூ. 1 - உரை), "உடலை உட்புறம் நோக்கி அசுசித்துவம்பாவிப்பதல்லது" (திருநூற்று. 68 - உரை), "உயிர்... ...பைம்மறியாப் பார்ப்பாருக்கு நரம்பு நாடி முதலியவை யாகாது அவற்றின் வேறுமாயினுற்போல" (சிவஞானபோதமாபாடியம், சூ. 12, அதிகரணம், 4), "பைம்மறிப் படுப்பி னுள்ளறி யாமற் பணிநறுந் துகில்புனை மடவார், மெய்ம்மிசைக் கருந்தோல் கண்டுவந் துழலும் வினையினேன்" சோணசைல. 67. பார்க்கப்படும் - பார்க்கின், (துறவுக்கு முயலத்தக்க துணிவு) உண்டாகும். பார்த்தல் – தகுதியெனலுமாம்.

(பி - ம்) ‡ 'தோற்போர்வை.'

43. தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே—யெக்காலு
† முண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

1. பெயர்ச்சொலொன்றே நின்று ஒழிந்த தன் இனங்களைத் தழுவியவதற்கு (நன் - மயிலை. சூ. 357) மேற்கோள். தக்கோலம் - வான்மிளகு ; "தக்கோலந் தீம்பூத் தாகைசா லிலவங்கங், கப்பூரம் சாதியோ டைந்து"

2 - 3. சோற்றுலடித்த சுவர். உறைக்கும் - புறப்படப்பொழியாநிற்கும்.

3 – 4. உண்டியைக் கைவிடுதற்கேதுவாகிய. மயல் – செத்தை ; "வம்புண் கோதயர் மாற்று மயலரோ" (சீவக 128). என்பதற்கு இவ்வடியை மேற்கோள் காட்டுவர் நச்சினார்க்கினியர். மயல் – புல்லெனபாருமுளர்.

மு. யகர வொற்றிடைவந்த ஆசிடை யெதுகைக்கு (யா - வி. தொடை. சூ. 5) மேற்கோள் ; "மெய்ப்படு சாந்தும் பூவு மிகநனி கமழு மேனுங், கைப்படு சாந்தும்பூவுங் கொண்டலாற் கலக்க லாகா, வைப்படு பித்து நெய்த்தோர சும்புசோ ரழுகற் புன்றோற், பொய்ப்பட வுரைத்த துண்டோ பொன்னனீர் நம்மு ணுமால்" (சீவக. 29381), "முருகு புத்தப் புதும லர்ப்பொற் புற முடிக்கிற் கமழுமே, கருகு காற்றைக் குழலொழிக்கிற் பழைய சிக்குக் கமழுமே." மோகவதைப்பரணி.

(பி - ம்) † 'உண்டிவினையுள்'

44. தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ

வுண்ணீர் களைந்தக்கா னுங்குருன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

1 - 2. "வேலொப் பனவெங் கணையொப் பனவஞ், சேலொப் பனசே யரிசிந் தியகண்" என்றார் பிறரும்.

2. கண் - அறிவு; "குன்றனு னுரைப்பக் கேட்டே பாகத்தார் குடும்ப நீக்கி, யின்று கண் விடுக்கப்பட்டேம்" (சீவக 1437) என்புழியும் காண்க. மாக்கள் - மனவுணர்ச்சியில்லாமல் ஐம்பொறியறிவுமட்டுமேயுடைய விலங்குபோன்ற ஒருசார் மானிடர்; "மாவு மாக்களு மையறி வினவே" (தொல். மரபு. சூ. 32). என்பதனாலும் அதன் உரையாலும் அறிக.

45. முல்லை முகைமுறுவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ
வெல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

2. அன்விகுதி, தன்மைக்கண் வருதற்கு (நன் - மயிலை. சூ. 330) மேற்கோள்.

1-2. "பல்லையென்று மென்பெனுது பவளமுட் பொதிந்த கூர், முல்லை யென்ப முறுவ லென்ப முத்த மென்ப பித்தரே" மோகவதைப்பரணி.

மு. முற்செய்யுளுடன் ஒப்பிடுக.

46. குடருங் *கொழுவுங் குருதியு மென்புந்
தொடருந் நரம்பொடு தோலு—மிடையிடையே
வைத்த † தடியும் வழும்புமா மற்றிவற்று
ளெத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

மு. கருத்து "என்பினை நரம்பிற் பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப், புன்புறந் தோலைப் போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்திட், டொன்பது வாயிலாக்கி யூன்பயில் குரம்பை செய்தான், மன்பெருந் தச்சனல்லன் மயங்கினார் மருள வென்றான்" (சீவக. 1577), "குடர்வழும்பு தொடர்நரம்பு குருதி யென்பு குழுவுமங், கடல்வழங்கு மமிர்தமிந்த மகளி ரென்ப கவிகளே" (மோகவதைப்பரணி), "நாடியோ வென்போ நரம்போசீக் கோழையோ, தேடியெனை யறியேன்" (சிவஞானபோதவார்த்திகம், சூ - 9, அதி - 1), இழிப்புச் சுவைக்கு மேற்கோள் (வீர. அலங்கார. சூ. 28), "என்னை கண்டுநீ மாதரார் வடிவமீ திச்சைவைத் துழல்கின்றாய், பொன்னை யுந்துகி லையும்பிரித் திடின் வெறும் புழுமலக் கூடல்லாற், பின்னையுண்டு கொல்" என்பதற்கு (வைராக்கிய சதகம், 42) மேற்கோள்.

(பி - ம்) * 'கொழுப்பும்' † 'தடியுமுடம்பு மாமற்'

47. ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப்—பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் † போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

1. ஒன்பது வாய்ப்புலனும் - நவத்துவாரங்களினின்றும் ; அறநெறி. 209.

2. கோதி - (உள்ளேயுலாவுகின்றவாயுவாற்) சிதறப்பட்டு ; அலைக்கும் - வருத்துதற்கிடமான.

1-2. புலனும் குழம்பும் ஊறிக் கோதி அலைக்கும் கும்பம் எனக்கூட்டுக.

3. பெருந்தோளி ! பெய்வளாய் ! , விளி

4. கண் விளக்கப்படுதல் - தோன்றியுந்தோன்றாமையுமாகி மயங்கல் ; "உடலை உட்புறம்பாக நோக்கி அசுசித்துவம் பாவிப்பதல்லது கருந்தோலாற் கண் விளக்கப்படார்" திருநூற்று. 68 - உரை.

(பி - ம்) † 'போர்த்து'

48. பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங்
† கண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொன்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் § குத்து
முடைச்சாகா டச்சிற் றுழி.

1. பண்டம் - உடல் ; ஈண்டு உடலின் தன்மையைக்குறித்தது; ஆகு பெயர். சீவக. 2621.

2. மேற்கதுவாயெதுகைக்கு (தொல். செய். சூ. 93 - ந) மேற்கோள்.

1 - 2. "புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது.........மக்கள் யாக்கை" மணி. 4 : 114-20 ; 18 : 136-9.

3. பேர்த்திட்டு—மறித்து மறித்து.

4. சாகாடு—சகடம்—வண்டி ; புறநா. 60 : 8 ; 90 : 7 ; 185 : 2 ; 256 : 2 ; குறள். 475. அச்சு - அச்சாணி ; "உயிரெனலுமாம் ; உணர்ச்சி யச்சாக வுசா வண்டியாக" (அறநெறி. 169) என்புழிப்போல.

(பி - ம்) † 'கொண்டு பாராட்டுவர்' § 'குத்தல்'

49. கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—யொழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

1. "கழிதல் - சாதல் ; 'கழிந்தாரிடுதலை' என்றார் பிறரும்" திருநூற்று. 33 - உரை.

2. "மா - கருமை. மாமிடறென்பது பண்புத்தொகையாய் இன்னதிது வென்னுந்துணையாய் நிற்றலானும், மைத்தழையாகின்றவென்பது அக்கருமையது

மிகுதியை உணர்த்தி நிற்றலானும், கூறியது கூறலாகாமையறிக. அது 'தாமரைமீமிசை' எனவும் 'குழிந்தாழ்ந்தகண்ணை' எனவும் இத்தன்மைய பிறவும் வருவனபோல" (திருச்சிற். 102 - பேர்), "கண்டறிதல் : 'குழிந்தாழ்ந்த கண்' என்புழிப்போலச் சிறப்பின்கண் வந்தமீமிசை (சிவஞானபோதமாபாடியம், சூ. 6, அதிகரணம், 2, 4-ஆம் வெண்பா ; நன் - மயிலை. சூ. 397 ; நன் - வி. சூ. 398) மேற்கோள்.

50. உயிர்போயார் வெண்டலை யுட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச்—செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனாற் றம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர்.

1. வெண்டலை - மேல்தோலழிந்து என்புமாத்திரமாய் நிற்குந்தலை ; "வெண்டலைப் பயின்ற காட்டுள்" (சீவக. 304, 2619) என்புழியும் காண்க. உட்க - வெருவ.

2. செம்மாப்பு - இறுமாப்பு ; "வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு" (நாலடி. 331) ; "செம்மாந்து செல்லுஞ் செறுநர்" (பழ. 131) செம்மாப்பவர், ஒருசொல் ; 'இறுமாப்பவர், அல்லாப்பவர், ஏமாப்பவர், சோகாப்பவர்' என்பன போல.

3. கண்டு இற்று இதன் வண்ணம் என்க.

4. பண்டம் : நாலடி. 13,48

ஆறும் அதிகாரம், துறவு.

51. விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்
றவத்தின்முன் னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது.

2. "தொல்லை நல்வினை முற்படத் தோன்றிய, வல்லல் வெவ்வினை போல வகன்றதே" (சீவக. 343), "எல்லை யாரிரு ளைல்வினை முன்னர்ப், பாவம் போலப் பறைந்தகை யகல' (பெருங். 1. 53 : 156 - 7), "போதமே லாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்" (காஞ்சி. நாட்டுப்படலம், 12), "தேய்தல் - தன் பகையாகிய அறம் வளர்தலால் தனக்குநிலையின்றி மெலிதல் ; 'தவத்தின்முன் னில்லாதாம் பாவம்' என்பதூஉம் இப்பொருட்டு" குறள். 96 - பரிமேல்.

3-4. நல்வினை......தீது : "மேனை வினையுலப்ப வேறாகி வீழ்வர்" நாலடி. 3) என்பதன் குறிப்பைப் பார்க்க.

2-4. விளக்குநெய்......தீது : "விளக்கினுட் பெய்தநெய்யுந், திரியுஞ்சென்றற்ற போழ்தே, திரிச்சுடர் தேம்பி னல்லா லெரிமொய்த்துப் பெருகலுண்டோ

விருவினை சென்று தேய்ந்தாற், பரிவுற்றுக் கெடாமற் செல்வம் பற்றியா ரதனை வைப்பார்" (சீவக. 2316), "எல்லை யாரிரு ணல்வினை முன்னர்ப், பாவம்போலப் பறைந்துகை யகல" (பெருங். 1. 53 : 155 - 6 ; ஷை. 3. 1 : 6 - 7) என்னும் செய்யுளை ஒப்பிடுக.

(பி - ம்) * 'விளக்கின்'

52. நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற் றும்
பித்தரிற் பேதையா ரில்.

2. "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வா மற்றல்லா, ரவஞ்செய்வா ராசையுட் பட்டு" (குறள். 266) என்பதைநோக்குக.

1 - 2. கருத்து : நாலடி. 33 ; "நில்லாதவற்றை நிலையின வென்றுணரும், புல்லறி வாண்மை கடை" குறள். 331.

4. இன்னுருபு ஒப்புப்பொருளில் வந்ததற்கு (இ - கோ. சூ. 56) மேற்கோள்.

53. இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றஞ்
செல்வம் வலியென் றிவையெல்லா—மெல்ல
நிலையாமை கண்டு ‡ நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு.

1. இல்லம் - குடிப்பிறப்பு. 'எழில் - எழுச்சி (குறள், 407); ஆவது, வளர்ந்தமைந்த பருவத்தும் இதுவளர்ந்து மாறியதன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல்' (தொல். பொருளியல், சூ. 53) என்பர் நச்சினார்க்கினியர் ; தோற்றப் பொலிவு என்பாருமுளர். வனப்பு - வடிவழகு, மீக்கூற்றம் - மேன்மையான சொல்லாற் பிறந்த புகழ் (கலி. 87 ; நன் - வி. சூ. 178), முதன்மை என்பாருமுண்டு.

3. நிலையாமை கண்டு நெடியார் துறப்பர் : குறள். 2661, 348. திருவள்ளுவப்பயனில், நிலையாமைக்குப்பின் துறவு வைத்திருத்தலும் நோக்கி மகிழத்தக்கது.

1 - 3. இல்லம்......கண்டு : நாலடி. 49, 50, 102 : 1-2 ; ஏலாதி. 20 ; "முடங்குட விளமை செல்வ முரண்வலி முதலா யுள்ள, வடங்கலு மகில முற்று மனித்தமென் றதுவே யன்றித், தொடங்கிய விடங்க டோறுந் துன்பமே யாகுந் தன்மை, யடங்கிய வறிஞ ராய்ந்த பரிசது மறைகுவன்" சிவஞானசரிதை ; அறநெறி. 89.

(பி - ம்) ‡ 'நொடியார்துறப்பார்த்தலையாயார்த்'

54. துன்பம் பலநா ளுழந்து மொருநாளை
யின்பமே காமுறுவ ரேழையா—ரின்ப
மிடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா
றடைவொழிந்தா † ரான்றமைந் தார்.

2. மு. நாலடி. 60 : 2; ஏழையர்-'நுழைந்த உணர்வினரன்றி வரும் வெண்மையினர்' (தொல். மெய்ப்பாடு. சூ. 26 - பேர்), "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம் (251)" ஆதலால், அறிவிலார் 'ஏழையர்' எனப்பட்டார்.

2 - 4. நாலடி. 182; "இடைதெரிந்து - வேறுபட ஆராய்ந்து; 'இடைதெரிய' என்பதனை, 'இன்ப, மிடைதெரிந் தின்னாமை.........ஆன் றமைந்தார் என்றாற்போலக் கொள்க" இ - வி. சூ. 570.

மு. நாலடி. 60; "சிறப்பறு நோயாற் றுன்பஞ் செடிகொண்மூப் பதனாற் றுன்ப, மறப்புறத் தியக்கஞ் செய்யு மாணவே தனையாற் றுன்பம், பிறப்பவ ரெக்காலத்தும் பெறுவது துன்ப மானாற், றுறப்பதே கருமம்" (துறுந்திரட்டு) அவிரோதவுந்தியார் 17 மேற்கோள்.

(பி - ம்) † 'ஆன்றவிந்தார்'

55. கொன்னே கழிந்தன் றிளமையு மின்னே
பிணியொடு மூப்பும் வருமாற்—றுணிவொன்றி
யென்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

1. 'கொன்' என்னுமிடைச்சொல், பயமின்மைப் பொருளுணர்த்தியதற்கும் (தொல். இடை. சூ. 6 - சே ; பேர் ; ந ; இ - வி. சூ. 265), இடைச்சொல் விசேடித்து நிற்றற்கும் (தொல். எச்ச. சூ. 59, 60 - ந) மேற்கோள்.

1 - 2. நாலடி. 92 : 1 - 2. துணிமை : நாலடி. 127.

மு. "இளமை கழியும் பிணிமூப் பியையும், வளமை வலியிவை வாடு-மூளநாளால், பாடே புரியாது......வீடே புரிதல் விதி" (ஏலாதி. 22) என்பதை நோக்குக.

56. மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையாற்— † பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார்.

3. மேன்முறை - முற்காலம்.

3 - 4. "மேன்முறை......அறிந்தார்' என்றவழிக் கடியென்பது வது வையின் வந்தது" (தொல். உரி. சூ. 73 - பேர்; நன் - மயிலை. சூ. 420) மேற்கோள்.

2 - 4. 'பூண்டான்........கற்றறிந்தார்' சொல்லெச்சத்திற்கு (நன் - மயிலை. சூ. 359 ; நன் - வி. சூ. 360) மேற்கோள்.

மு. இச்செய்யுளை நாலடி, 364 ஆம் செய்யுளுடன் ஒப்பிடுக.

(பி - ம்) † 'பூண்டன், மிடி'

57. உளக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கா
னீக்கி நிறூஉ முரவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவத் தவர்.

1. உளக்கி - ஒருப்பட்டு.

3. உரவோர் - அறிவினையுடையோர்; "உரன் - அறிவு; 'உரவோ ரெண்ணினு மடவோ ரெண்ணினும்' (பதிற். 73.) என்றார் பிறரும்" கலி. 142-ந.

3-4. "நல்லொழுக்கங், காக்குந் திருவத்தவர்' என உகரவீறு வேற்றுமைக் கண் அத்துப்பெற்றது" தொல். குற்றியலுகரம். சூ. 78 - ந.

மு. அவிரோதவுந்தியார், 64 மேற்கோள்.

58. தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா—னும்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

3. கொல், வினாவகையால் இரக்கமுணர்த்திற்று; "இடைச் சொற்கள் வேண்டிய பல பொருள்களையும் விளைத்தற்குரியன" என்னும் வழக்கால்.

2-4. "துன்பத்திற்கு நோதலாவது, 'உம்மை......வீழ்வர்கொல்' என்று பரிதல்" (குறள். 157 - பரிமேல்), "உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லு, மின்னாச்சொ னோற்பாரிற் பின்" குறள், 160.

மு. வாகைத்திணையின் றுறைகளுளொன்றாகிய 'பிழைத்தோர்த் தாங்குங் காவல்' என்பதற்கு மேற்கோள் (தொல். புறத்திணை. சூ. 21 - ந); "நோவ வுரைத் தாரைத் தாம்பொறுக்க லாகாதார், நாவி னொருவரை வைதால் வயவுரை, பூவிற் பொலிந்தகன்ற கண்ணா யதுவன்றே, தீயில்லை யூட்டுந் திறம்" (பழ. 45) என்னும் செய்யுளின் கருத்தை ஒப்பு நோக்குக.

59. மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வைவாய வேட்கை யவாவினைக்—கைவாய்க்

கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.

2. வேட்கை - பொருள்களின் மேல் தோன்றும் பற்றுள்ளம். அவா - அப் பொருள்களைப் பெறவேண்டுமென்று மேன்மேல் நிகழும் ஆசை; மனத்தால் வருமாசை என்பாருமுளர்.

1-2. ஐவாய வேட்கை - ஐம்புலஆசை; "பொறியெனும் பெயரா வைவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே" (சீவக. 375), "ஐந்தவித்தா னாற்றல்", "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்து", "அடல்வேண்டு மைந் தன் புலத்தை" (குறள், 25, 27, 343) என்புழியுங் காண்க.

3. காத்து - தடுத்து;— "கதங்காத்துக் கற்றடங்கல்", "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்" (குறள், 130, 301) என்புழிப்போல.

60. துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளா
ரின்பமே காமுறுவ ரேழையா—ரின்ப
மிசைதொறு மற்றத னின்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்.

2. நாலடி. 54 : 2.

4. பசைதல் பரியாது - மேவுதலைக் காதலியார்.

ஏழாம் அதிகாரம், சினமின்மை.

61. மதித்திறப் பாரு மிறக்க * மதியா
மிதித்திறப் பாரு மிறக்க—மிதித்தேறி
யீயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

1. இறப்பார் - அளவுகடப்பவர்.

2. மதித்தல் - வைதல்முதலியன.

4. நாலடி. 67 : 4.

(பி - ம்) * 'மதியார்'

62. திண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லாந் துறப்பவோ—மண்டி
யடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர்.

1. " தண்டுதல் - அமைதல் என்னும் பொருட்டுதல் தண்டாமையென்னும் அதன் மறையால் உணர்க; 'தண்டாக்காற் றளரியல்', 'தண்டா விருப்பினள்' எனவரும்" கலி. 85 - ந.

3 - 4. குறள். 970.

63. காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொ
லோவாதே தன்னைச் சுடுதலா—லோவாதே
யாய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

3. கேள்வி :— "கற்றறிந்தார் கண்டதடக்கம்" என்றார் பிறரும்.

4. கருத்துமாறு : நாலடி. 117.

மு. "எள்ளிப் பிறருரைக்கு மின்னாச்சொற் றன்னெஞ்சிற், கொள்ளி வைத்தாற்போற் கொடிதெனினு - மெள்ள, அறிவென்னு நீரா லவித்தொழுக லாற்றின், பிறிதெனினும். வேண்டா தவம்" (அறநெறி. 101), 'தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே, நாவினாற் சுட்ட வடு", "தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற், றன்னையே கொல்லுஞ் சினம்" குறள், 129, 305.

64. நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோ—ரோர்த்ததனை
யுள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்.

1. 'நிகர்' உவமவுருபாக வந்ததற்கு (நன் - மயிலை. சூ. 366) மேற்கோள்.

1 - 2. "நேர்த்து.........விழுமியோர் : என்புழி வெகுண்டுவோரார் என முன்பின்னாகப் பிறந்தது" (பிரயோக. சூ. 39), "கண்டுகொட்டல் : என்பதனை, 'வேர்த்து வெகுளார் விழுமியோர்' என்புழிப்போலக் 'காட்டிக் காண்டல்' என மாறி வைத்துரைத்துக்கொள்க" சிவஞானபோதமாபாடியம், சூ. 11.

மு. நாலடி. 66 : 1 - 2; 70 : 3 - 4; 72 : 1 - 2; "ஆய்ந்த வறிவின ரல்லாதார் புல்லுரைக்குக், காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்" "இறப்பச் சிறியவ ரின்னா செயினும், பிறப்பினான் மாண்டார் வெகுளார்" பழ. 268, 370; நீதிநெறி. 17.

65. இளையா னடக்க மடக்கங் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பய—னெல்லா
மொறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

1. "அடக்கம் - உயர்ந்தோர்முன் அடங்கியொழுகும் ஒழுக்கம்; அவை பணிந்தமொழியும் தணிந்தநடையும் தானையடக்கலும் வாய்புதைத்தலுமு தலாயின" தொல். மெய்ப்பாடு. சூ. 12 - பேர்.

1 - 2. இளை பொருள்...... கொடைப்பயன்: "பெருவிறல், கைப் பொருள் யாதொன்று மிலனே நச்சிக், காணிய சென்ற விரவன் மாக்கள், களிற்றொடு நெடுந்தேர் வேண்டினுங் கடல, வுப்பொய் சாகாட் டுமணர் காட்ட, கழிமுரி குன்றத் தற்றே" (புறநா. 313) "பொறுத்த லிறப்பினை யென்று மதனை, மறத்த லதனினு நன்று" குறள். 152.

2. கொடை - உயிரும் உடம்பும் உறுப்புமுதலாகிய எல்லாப்பொருளும் கொடுத்தல்; தொல். மெய்ப்பாடு. சூ. 9 - பேர்.

66. கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னாச்சொ
லெல்லாருங் காணப் பொறுத்துய்ப்ப—சொல்லை
யிடுநீற்றாற் பையவிந்த நாகம்போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

1. கயமை - குணங்கள் யாவும் இலராய கீழோராது தன்மை; குறள். 108 - அதி. பரிமேல்.

1 - 2. நாலடி, 64 : 1 - 2 ; 70 : 3 - 4 ; 72 : 1 - 2 ; குறள். 156; 'வாய்' என வேண்டாது கூறினூர், கயவர் வாய் எப்பொழுதும் நல்ல சொற்கள் பயின்றறி யாதென அதன் இழிவு விளங்குவதற்கு (குறள். 91, 139, 145-பரிமேல்) என்க.

3. அவிந்த - ஒதுங்கிய.

4. குடிமை - குடிப்பிறப்பிற்குத்தக்கவொழுக்கம்; "குடிப்பிறந்தாரது தன் மையைக் குடிமை என்றூரென்பது; அதனை ஊராண்மையெனவும் சொல் லுப" (தொல். மெய்ப்பாடு. சூ. 25 - பேர்) 'வான்றோய்குடி' நாலடி. 69: 4; பெருங். 1. 35 :226,232; மணி. 14:61.

67. மாற்றூராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
யாற்றாமை யென்னு மறிவுடையா—ராற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

3-4. நாலடி. 61: 4; "இணரெரி தோய்வன்ன வின்னா செயினும், புணரின் வெகுளாமை நன்று" குறள், 308, 861.

68. நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு—மடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

2-4. "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேனுங் காத்த லரிது" குறள். 29.

. ஓ "கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்து ... விற்பிடித்து, நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே, சீரொழுகு சான்றோர் சினம்" மூதுரை. 23.

69. உபகாரஞ் செய்ததனை யோராதே தங்க
ணபகார மாற்றச் செயினு—முபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந் தார்க் கில்.

3. ஊக்கல் - முயன்றுசெய்தல்.

4. "வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது" நாலடி. 66;142 : 2; "வானுயர்தோற்றமென்பது; 'வான்றோய்குடி' என்றாற்போல இலக்கணைவழக்கு" குறள். 272 - பரிமேல்.

ஓ. "இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண, நன்னயஞ் செய்து விடல்", "இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா, லென்ன பயத்ததோ சால்பு" குறள். 314, 316.

70. கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு.

1. கூர்த்து - சினமிக்கு. 'வாயால்' எனவேண்டாது கூறினார்; "(அவர்கள் வாய்) நல்ல சொற்களையே பயின்றதெனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு" குறள். 91, 139, 415.

2. பேர்த்து - பெயர்த்து; பெருங். 1. 32 : 52.

3-4. நாலடி. 64 : 1 - 2; 66 : 1 - 2; 72 : 1 - 2; "ஆய்ந்த வறிவின ரல்லாதார் புல்லுரைக்குக், காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்" பழ. 268.

ஓ. "நீர்த்தக வில்லார் நிரம்பாமைத் தந்நலியின், கூர்த்தவரைத் தாநலிதல் கோளன்றால் சான்றோர்க்குப், பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கவ்விற், பேர்த்துநாய் கவ்வினா ரில்" பழ. 375.

முதலாவது,

துறவறவியல் முற்றிற்று.

இரண்டாவது, இல்லறவியல்.

முதலாவது, பொறையுடைமை.

71\. கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையொ டியாது முரையற்க—பேதை
யுரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

1\. " இலங்கு நீண்முடி யிந்திரன் மார்பின்மேல், விலங்கி வீழ்ந்தமுத் தார மும் போன்றவை ", " கோதை யருவிக் குளிர்வரை மேனின்று ", "விலங்கு மாலை வெள்ளருவிய வெழில்வரை" (சீவக. 35,525, 2378) கோதை என்பதற்கு 'ஒழுங்கு' எனப் பொருள்கூறி, 'கோதை யருவி' என்பதை மேற்கோள் காட்டுவர் அடியார்க்குநல்லார்; சிலப். 5 : 191—5.

3\. சிதைந்துரைக்கும் - கெடச்சொல்லுவான். ஒல்லும்வகையான் - தத்தமக் கியலுந் திறத்தான்; குறள். 33.

2-3. "கல்லா தவரிடைக் கட்டுரையி னல்லதோர், பொல்லாத தில்லை யொருவற்கு " (பழ. 64), " வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின் " சிலப்.30: பதி.

2 - 4. ஆருச் சினத்த னறிவிலன் மற்றவனை, மாறியொழுக றலை யென்ப—வேறி, வளியாற் றிரையுலாம் வாங்குநீர்ச் சேர்ப்ப, தெளியானைத் தேற லரிது " (பழ. 385), " நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப் பண்பில் சொற்பல்லா ரகத்து ", " புல்லவையுள் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு ணன்கு செலச்சொல்லு வார் " குறள். 194,719, 729.

72\. நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்த றகுதிமற்—றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும்.

1\. நீரல்ல - நற்குணமுடையவாகாத ; நாலடி. 64.

2\. ஓரும், அசை ; " அஞ்சுவதோருமறனே " (குறள். 366) என்புழிப் போல.

1 - 2. தாரித்து- பொறுத்து; நாலடி. 58, 64 : 1 - 2 ; 66 : 1 - 2 ; 70 : 3 - 4 ; " தெரியா தவர்தந் திறனில்சொற் கேட்டாற், பரியாதார் போல விருக்க " (பழ. 135), " சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம், பெரியோ ராயிற் பொறுப் பது கடனே " வெற்றிவேற்கை.

4\. சமழ்மை - தாழ்வு ; வருத்தமென்றும், நாணமென்றும் கூறிய..

பு. எதிர்மறையெச்சத்திற்கு (நன் - மயிலை. சூ. 359) மேற்கோள்.

73. காதலார் சொல்லுங் கடுஞ்சொல் லுவந்துரைக்கு
மேதிலா ரின்சொலிற் றீதாமோ—போதெலா
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
வாவ தறிவார்ப் பெறின்.

1 - 2. இன்சொலின் - இதமானவற்றைக்காட்டில்; நாலடி, 222, 225; "அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய, வல்லார்நட் பாய்ந்து கொளல்" (குறள், 795), "உளையவுரைத்து விடினு முறுதி, கிளைகள்வாய்க் கேட்பது நன்றே" (பழ. 299), "இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார் கனியு மொழியுங் கடுவே" (நீதிநெறி. 59), "மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர், பேசுற்ற வின்சொற் பிறிதென்க" (நன்னெறி. 2), "அழ அழச் சொல்லுவார் தமர், சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் பிறர்" என்னும் பழமொழியும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

74. அறிவ தறிந் ‡ தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனா
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது.

1. அஞ்சுவதஞ்சல்: "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ தஞ்ச, லறிவார் தொழில்" குறள். 428.

2. உறுவது - உறுதி. உலகுவப்ப - ஒப்புரவார் மகிழுமொப்புரவுகளை.

2 - 3. பெறுவதனால்......... இயல்பு: "போதுமென்ற மனமே பொன் செய்யு மருந்து" பழமொழி.

4. அரிது, இன்மை குறித்துநின்றது.

பூ. "அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை, யாரிரு ளுய்த்து விடும்", 'உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங், கல்லா ரறிவிலா தார்", "அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா, ரஃதறி கல்லா தவர்", "அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா, ரென்னுடைய ரேனு மிலர்" (குறள், 121, 140, 427, 430) "கற்றறிவார் கண்ட தடக்கம்"

(பி - ம்) ‡ 'அடக்கி'

75. வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்காற்
றேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயி
னாற்றுந் துணையும் பொறுக்க பொறானாயிற்
றூற்றாதே தூர விடல்.

2. "தேற்றகில்லேமென்பது, 'தேற்றாப் புன்சொ னோற்றிசின்' (புறம். 202) என்பதுபோலத் தெளிதற்கண் வந்தது" (திருச்சிற். 45-பேர்), 'காட்டியவென்

பது தன்வினைப்பொருள்படநின்றது ...... தேற்றாவொழுக்கம்...... என் புழிப்போல" (சிவஞானபோதமாபாடியம், சூ. 9, அதிகரணம்,). "தேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயின்......இவை சொல்லொன்றே தன்வினை யும் பிறவினையும் ஆயின" (இ - கொ. சூ. 67 ; நன் - வி. சூ. 322), "தேற்றாய் பெருமநீ பொய்யே" (புறம். 59), "சிலசொல்ல றேற்றா தவர்" (குறள், 649), "வாளினாற் பேச லல்லால் வாயினாற் பேச றேற்றேன்", "வாணிக மொன்றுந் தேற்றாய்" சீவக. 257, 770.

4. "உளவே : என்னும் ஏகாரம் எதிர்மறை ...... 'தூற்றாதே தூர விடல்' என்றது, 'தூற்றும்' என்று பொருள்பட்டவாறு போல என்றறிக" (திருச் சிற். 110-பேர்), "தூற்றாதே தூரவிடல் : தூற்றும் என்னும் பொருள்பட்டமை யான் எதிர்மறையேகாரம்" நேமி. சூ. 52.

மு. நாலடி. 221, 227, 229; "ஆண்டாண் டெனவொன்றோ வேண்டா வடைந்தாரை, மாண்டிலா ரென்றே மறைப்பக் கிடந்ததோ ... ... பூண்ட, பறை யறையா ராயினா ரில்" பழ. 112; குறள். 807.

76. இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது.

1. இனியவொழிகென்று : நாலடி. 306.

3-4. "விள்ளல்-சொல்லல்; 'கைவிடுதல் விள்ள லரிது', 'கலந்தாரைக் கைவிடு தல்'... எனக், கையென்பது உபசர்க்கமாய் ... வினைச்சொல்லோடும் வந்தது" பிரயோக. சூ. 45 ; நாலடி. 220, 223, 246, "விலங்கேயுந் தம்மோ டுடனுறைதன் மேவுங், கலந்தாரைக் கைவிடுத லொல்லா ... இன்னாதே, பேஎயொ டானும் பிரிவு" (பழ. 122), "பிரிவு செய்தா லரிதே கொள்க பேயொடு மென்னும் பெற்றி" (திருச்சிற். 144), "பேயோ டேனும் பிரிவொன்றின்னா தென்பர் பிறரெல்லாம்" (திருப் பாட்டு. சுந்தரர். ஆரூர்), "தெரியக், கண்ணிற் காணா ராயினுங் கனவி, னண் ணுங் காலை நல்லுயிர் செருக்கும், பேயே யாயினும் பிரியி னின்பம், வாயா தென்று மதியோ ரறைப, மரீஇ நாளுநின் னன்றி யாரு, மறிய வார பெரும" (ஞானமிர்தம், 46), "மருவியவப், பேயின்றிறத்துப் பிரித லின்னா வென்று பேசுவரே" (அம்பிகாபதி. 517), "பேயோடு பழகுறினும் பிரிவதரி தரிதென்று தூயோரு மொழிவரால்" (குசேலோபாக்கியானம்), 'கூடிப்பிரியேல்' ஆத்திசூடி.

மு. ஒழியிசையெச்சத்திற்கு (நன் - மயிலை. சூ. 359) மேற்கோள்.

77. பெரியார் பெருநட்புக் கோடறாஞ் செய்த
வரிய பொறுப்பவென் றன்றோ—வரியரோ

வொல்லெ னருவி யுயர்வரை நன்னாட
நல்ல செய்வார்க்குத் தமர்.

மூ. கம்ப. 110 : 80.

3. உயர்வரை, வினைத்தொகை. 'உயர்' என்பது வினைப்பகுதியாதலாலும் காலந்தோன்றிநிற்றலாலும் பண்புத்தொகை எனல் பொருந்தாது; தோல். கிளவி. ரு.

78. வற்றிமற் றற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்ற மறிய வுரையற்க—வற்ற
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

1. "வற்றிமற் றற்றப் பசிப்பினும்": (நாலடி. 285, 292; குறள். 1014, 1043, 1046, 1051-7), "புனிற்று நாய் குரைக்கும் புல்லெ னட்டில், காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த, பூழி பூத்த புழற்கா ளாம்பி, யொல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல், வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த, குப்பைவேளை யுப்புலி வெந்ததை, மடவோர் காட்சி நாணிக் கடையடைத், திரும்பே றொக்கலொ டொருங்குடன் மிசையு, மழிபசி வருத்தம்" (சிறுபாண். 132 - 40), "ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பி, னாம்பி பூப்பத் தேம்புபசி யுழவா" (புறம். 164), "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும், பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ, நாணணி களையு மாணெழில் சிதைக்கும், பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும், பசிப்பிணி யென்னும் பாவி" (மணி. 11 : 76 - 80), "மானம் குலம் கல்வி ... ... காமுறுதல் பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்" (நல்வழி). பண்பு - இனிமையும் மெய்ம்மையு முதலாயசொற்குணங்கள் (குறள். 643 - பரிமேல்), "பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்" கலி. 124.

2. அற்றம் - எல்லாப்பொருள்களும் அறுதல்; ஆவது வறுமை.

3. மறைதல் - நீக்குதல்; "தம்வயிற் குற்றம் மறையாவழி" (குறள்) என்புழியும் காண்க. வெளிப்படாதெழுதல் எனினுமாம்.

மூ. நாலடி. 292; "தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்ப ரெனப்பட்டார்க், குற்ற முறையை யுரைப்பதாந் - தெற்ற, வரையா ரணிவளையாய் தீர்த லுறுவார், மறையார் மருத்துவர்க்கு நோய்" (பழ. 88), 'தோழனோடு மேழைமை பேசேல்'

79. இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினு
மின்பத்தின் பக்க மிருந்தைக்க—வின்ப
மொழியாமை கண்டாலு மோங்கருவி நாட
பழியாகா வாறே தலை.

2. இருந்தைக்க - ஒழிக; "கடிநிலை யின்றே யாசிரி யற்க" (தொல்). என்புழிப்போல.

80. தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பி
னூன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க—†வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

1 - 2. தன்னுடம்பின்......உண்ணற்க: நாலடி. 206.

2 - 3. வான் கவிந்த வையகம்: "வானஞ் சூடிய, மலர்தலை யுலகத்துள்ளும்" (பெரும்பாண். 409 - 10), "வானஞ் சூடிய, மண்டிணி கிடக்கை" புறம். 35.

3 - 4. "உயர்நிலை யுலக மமிழ்தொடு பெறினும், பொய்சே ணீங்கிய வாய்நட் பினையே" (மதுரை. 197 - 8), "நும்மோ ரன்னோர் மாட்டு மின்ன, பொய்யொடு மிடைந்தவை தோன்றின், மெய்யாண் டுளதோவிவ் வுலகத் தானே" அகம். 286.

பூ. அரிச்சந்திரசரிதையை நோக்குக.

(பி - ம்) † 'வான் கவித்த'

இரண்டாம் அதிகாரம், பிறர்மனைநயவாமை *

81. அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவா
னிச்ச நினையுங்காற் கோக்கொலையா—னிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற்‡ பிறன்றார
நம்பற்க நாணுடை யார்.

* குறள், 15 - அதிகாரம்.

3. கூர்த்த - மிகுந்த; ஞானமிர்தம், 44.

பூ. "பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத், தறம்பொருள் கண்டார்க ணில்" (குறள். 141), "தங்கிருட் போதில் தலைச்சென் றயன்மனை, யுங்கு மகிழ்ந்தா ளவளிவள் காணெனச், செங்கன லேயென வெம்பிய செம்பினிற், பொங்கனற் பாவைகள் புல்லப் புணர்ப்பார்" (சூளா. துறவு. 9), "காதலாள் கரிந்து நையைக் கடியவே கனிந்து கன்றி, யேதிலான் றாரநம்பி யெளிதென விறந்த பாவத், தூதுலை யுருகவெந்த வொள்ளழற் செப்புப் பாவை, யாதகா தென்னப் புல்லி யலறுமால் யானை வேந்தே" (சீவக. 2769), "வம்புலாங் கூந்தன் மனைவியைத் துறந்து பிறர்பொரு டாரமென் றிவற்றை, நம்பினா ரிறந்தா லமன்றமர் பற்றி யெற்றிவைத் தெரியெழுகின்ற, செம்பினா லியன்ற பாவையைப் பாவீ தழுவென மொழிவதற் கஞ்சி, நம்பனே வந்துடன் றிருவடி யடைந்தேன்" பெரிய திருமொழி, 1. 6. 4.

(பி - ம்) ‡ 'பிறர் தாரம்'

82. §அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

1 - 2. "அறனு மறனறிந்த செய்கையுஞ் சான்றோர், திறனுடைய னென்றுரைக்குந் தேசும் - பிறனில், பிழைத்தா னெனப்பிறராற் பேசப் படுமே, விழுக்கா மொருங்கே யிவை" அறநெறி. 149.

அறம் புகழ் கேண்மை பெருமை என்பனவற்றை, பாவம் பழி பகை அச்சமென்பவற்றோடு கூட்டுக.

2-4. பிறன்றாரம்......பொருள்: "பகை பாவ மச்சம் பழியென நான்கு, மிகவாவா மில்லிறப்பான் கண்" (குறள். 146), "எவ்வினைய ரேனு மினைவிழைச்சொன் றிலரெனிற், றெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉ-மவ்வினை,காத்திலரே லெனைத்துணைய ராயினுந், தூர்த்தருந் தூர்ப்பா ரலர்" நீதிநெறி. 89.

மு. கருமமுங் கருத்தாவும் தானேயாய் நிற்றலிற் கருமகருத்தாவாயிற்றென்பர் பெருந்தேவனார்; வீர. உபகாரப். சூ. 41.

(பி - ம்) § 'அறம் பொருள்'

83. புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சந்
துய்க்குமிடத் தச்சந் தோன்றுமற் காப்பச்ச
மெக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல்.

3. எவன் கொல் - எவ்வண்ணமோ; ஞானமிர்தம், 44, 46.

4. உட்கான் பிறனில் புகல்: "வினைத்துணையுந் தேரான் பிறனில் புகல்" (குறள். 144) என்புழிப்போல.

84. காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
*மாணின்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி †நீகண்ட
வின்ப மெனக்கெனைத்தாற் கூறு.

2. ஆணின்மை - (உயர்ந்த) மனிதனுக்குரிய குணமாகாத அத்திய ஒழுக்கத்தை; "பிறன்மனை நோக்காத பேராண்மை" (குறள். 148) என்பதன் உரையில், "புறப்பகைகளை யடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற்கு அருமையின், அதனையடக்கிய ஆண்மையைப் 'பேராண்மை' என்றார்" எனப் பரிமேலழகர் கூறுவதுங்காண்க. நிரயத்துன்
பம் - நரக வேதனையைச் செய்யுந் துன்பம்; (நாலடி. 86 : 4), "நிரயத்துள் துன்

சாத் துயரந் தரும்" (அறநெறி. 65), "நிரயத்தானை - மாற்றார்க்கு நரகவேதனை யைச் செய்யுந் தானை" (சிலப். 30 : 25) என அரும்பதவுரையாசிரியர் கூறுவதும் காண்க.

3. துச்சாரி - துராசாரமுடையோய்.

(பி - ம்) * 'மாணின்மை செய்யுமா மச்சமாம்' † 'நீ கொண்ட'

85. செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ—யும்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
யலியாகி யாடியுண் பார்.

1. செம்மை - நடுவுநிலைமை. "சிறியவினமாவது - நல்லதனலனும் தீயதன் றீமையும் இல்லென்போரும் விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு" (குறள். 46 - அதி. பரிமேல்), "வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு, குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப், பொச்சாப் புண்டு பொருளுரை யாளர், நச்சுக்கொன் றேற்கு" சிலப். 16 : 63 - 6.

2. கொம்மை - திரட்சி (ஞானாமிர்தம், 33, 35), பெருமை (சீவக. 347); இளமையெனினுமாம்; "கொம்மை வருமுலை" (நெடுநல். 69 ; சிலப். 28 : 16.) உம்மை - முற்பிறப்பு ; சிலப். 15 : 92 - அடியார்.

3. பிறர்மனை மேற்சென்றார்: "பிறன் கடை, நின்றாரிற் பேதையா ரில்" (குறள். 142) என்புழிப்போல.

86. பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க—மெல்லியற்
காதன் மனையாளு மில்லாளா வென்னொருவ
னேதின் மனையாளை நோக்கு.

1 - 2. "பல்லாரறிய...... கல்யாணஞ் செய்து : "நாடறி நன்மண மயர் கம்" (குறிஞ்சி. 232), "பலரறி மணமவர் படுகுவர்" சிலப். 24. "மலைமகள்"
2. கடி : நாலடி. 56 : 4.

4. நோக்கு : "பிறன்மனை நோக்காத பேராண்மை" (குறள். 148) என்பதற்கு "பிறன் மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்டகைமை" எனப் பரிமேலழகர் கூறியிருத்தலும் காண்க.

மூ. "அறனிற் கொண்ட தன்மனையா ளமளித் தலத்தி லழுதிரங்கப், பிற னிற் றேடும் பெரும் பாவி" (பாரதம்) என்றதுங் காண்க.

87. அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பு

நிலைமையி னெஞ்சத்தான் றப்புரவு பாம்பின்
றலைநக்கி யன்ன துடைத்து.

1. அம்பல் - சொல் நிகழாதே முகிழ்த்துச்சொல்லுதல் ; தொல். களவு. சூ. 48 - ந; இறை. சூ. 22.

2. வம்பலன் - அயலான். பெண் - மனைவி.

88. பரவா *வெளிப்படா பல்லோர்கட் டங்கா
வுரவோர்கட் காமநோ யோஒ கொடிதே
விரவாரு ணுணுப் படலஞ்சி யாது
முரையாதுள் ளாறி விடும்.

2. உரவோர் - அறிவினையுடையோர். ஓஒ ! கொடிதே : "ஓஒ பாவம்" (சீவக. 1551) என்புழிப்போல.

(பி - ம்) * 'வெளிப்படார் பல்லோர்கட்டங்கார்'

89. அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும்.

மு. நாலடி. 90 ; "நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந், தீயாண்டுப் பெற்றா ளிவள்", "மறப்பி னெவனாவன் மற்கொன் மறப்பறியே, னுள்ளினு முள்ளஞ் சுடும்" (குறள். 1104, 1207), "மேவுதற் கரிதாய்க் கேசம் புகையதாய் விழிக்கு நன்றாய்த், தீவினைச் சிகைசேர் மாத ரொனுங்கன திருணம் போல, யாவரைச் சுடாது தூரத் தெரிகின்ற நரகத் தீக்குப், பாவையர் குளிர்ந்த மேனி பசையிலா விறக தாமே" (ஞானவாசிட்டம்.) மகளிர் சுகம் இடராய் விளையுமென்பதற்கு (அவிரோதவுந்தியார், 89) மேற்கோள்.

90. உளாரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்.

1. உருகெழு - அச்சம்பொருந்திய.

4, சுடும் - சுடவற்று.

மு. "நெடுஞ்சுடர்த், தீயினுற் சுடுதலோ விலர்ம னுயிழை, தீயினுங் கடிதவர் சாயலிற் கனலுநோய்", "ஊர்தலைக்கொண்டு கனலுங் கடுந்தீயு, ணீர்பெய்தக் காலே சினந்தணியு மற்றிஃதோ, ஈரமில் கள்வ னுறீஇய காமத்தீ, நீருட் புகினுஞ்

சுடும்'' (கலி. 137, 144),,, காலத்தால் வருவ தொன்றோ காமத்தாற் கனலும் வெந்தீச், சீலத்தா லழிவதன்றிச் செய்யத்தா னவதுண்டோ'' (இராமாவதாரம்), மகளிர் இன்பம் இடராய் விளையுமென்பதற்கு (அவிரோதவுந்தியார், 89) மேற்கோள்.

மூன்றாம் அதிகாரம், ஈகை

91. இல்லா விடத்து மியைந்த வளவினா
லுள்ள விடம்போற் பெரிதுவந்து—மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு.

2. நாலடி. 98.

1-3. நாலடி. 94: 1-2 ; 95. 1-2.

மு. நாலடி. 112, 141, 150, 153, 212, 271, 272, 300, 343 ; ''இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார், கடனறி காட்சி யவர்'' (குறள். 218, 224), ''ஒன்றாக நல்ல துயிரோம்ப லாங்கதன் பின், னன்றாய்ந் தடங்கினார்க் கீத் துண்ட லென்றிரண்டு, குன்றாப் புகழோன் வருமென்று மேலுலக, நின்றது வாயி றிறந்து'' அறநெறி. 62 ; சீவக. 13 : 225, 244.

92. முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

2. கொன்னே - பயனில்லாதவற்றை; (நாலடி. 19) விகற்பமற எனலுமாம்; ஞானாமிர்தம், 6.

1 - 2. நாலடி. 55. 1 - 2 ; ''முன்னரே.....நோயுள : எனவும் பிறாண்டும் 'முன்னர்', 'பின்னர்' என்பன இடமுணர்த்தியே நிற்குமென்றுணர்க'' மதுரை. 40 - 42. ந.

3: பாத்துண்மின் - ''பசியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின்'' (குறள். 44) என்பதற்கு, ''அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினார்க்கும் தென்புலத்தார்முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தானுண்டல்'' எனப் பொருள் கூறுவர் பரிமேலழகர்; ''பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர், தொகுத்தவற்று ளெல்லாந் தலை'' ஷை. 322.

4. கரவன்மின் - கரந்து செய்யன்மின் ; ''கைத்துண்டாம் போழ்தே கராவா தறஞ் செய்ம்மின்'' நாலடி. 19.

3 - 4. நாலடி. 271 : 3 - 4 ; 272 : 3 - 4.

93. நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்†தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந் தக்கால்.

3. மிடுக்கு - வலி.

4. உலந்தக்கால் - கெட்ட இடத்து.

மூ. அடிமறிமாற்றுப்பொருள்கோளுக்கு (நன் - மயிலை. சூ. 418'; நன் - வி. சூ. 419) மேற்கோள். குறள். 371, 376.

(பி - ம்) † 'தற்றுய்ப்பினும்'

94. இம்மி யரிசித் துணையானும் வைகலு
நும்மி லியைவ கொடுத்துண்மின்—உம்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர்.

1. இம்மியரிசி - மத்தங்காய்ப்புல்லரிசி ; "இம்மியன நுண்பொருள்கள்" (சீவக. 495) என்புழியும் காண்க.

95. மறுமையு மிம்மையு நோக்கி யொருவற்
குறுமா றியைவ கொடுத்தல்—வறுமையா
லீத லிசையா தெனினு மிரவாமை
யீத லிரட்டி யுறும்.

1 - 2. நாலடி. 95 : 1 - 2 ; 271 : 1 - 2 ; 272 : 1 - 2 ; "இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை" (முதுமொழிக்காஞ்சி. 55), "இயல்வதுகரவேல்" "ஐயமிட்டுண்" ஆத்திசூடி.

2. உறுமாறு.

3. ஈதல் இசையாதெனினும் : "ஈகையரிதெனினும்" (நீதிநெறி) ; இசையாதெனினும் : நாலடி. 152, 193.

3 - 4. "வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோ, னல்குரவே போலு நனிநல்ல—கொன்னே, யருளில னன்பிலன் கண்ணறைய னென்று, பலரா லிகழப் படான்" (நீதிநெறி. 67), "காயா மரமும் வறளாங் குளமுங் கல்லாவு மென்ன, வீயா மனிதரை யேன்படைத் தாய்கச்சி யேகம்பனே" (பட்டினத்தார்), "நல்லது செய்த லாற்றீ ராயினு, மல்லது செய்த லோம்புமின்" (புறம். 195), "கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு, மிரவாமை கோடி யுறும்" (குறள் 1061), "மொழிந்தவை, மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவாரேனல் விண்ணோரா, வின்மொழியா லேத்தப் படும்" சிறுபஞ்ச 81.

96. நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்கள்
§ சுடுகாட்டு ளேற்றைப் பனை.

1. வேதிகைச் சுற்று - வேதிகை வட்டத்தையுடைய ; கோட்புக்க - குலையோடு கூடிய. "பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ, நயனுடை யான்கட் படின்" (குறள். 216), "உதவுமாடியர், பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும்" (இராமாவ. அயோத்தி. மந்திரப் 82), "கற்றையஞ் சுடர்மணி கனக மேனைய, பிற்றையென் னுதருள் பெரியவர் வண்மைபோன், மற்றவ னுள்ளபன் மாமுந் தம்பய, னெற்றையு முலப்புறா நீகை சான்றவே" (கந்தபுராணம்......) என்பவற்றை ஒப்பிடுக.

4. "எல்லாமென்றதனாற் சிறுபான்மை ஆற்றலில்லாதனவுங் கொள்க ; அது 'சுடுகாட்டுளேற்றைப்பனை' என்பதுபோன்று வருவன" தொல். மரபு. சூ. 49 - பேர்.

மூ. "நச்சப் படாதவன் செல்வ நடுவூரு, ணச்சு மரம்பழுத் தற்று" குறள். 1008.

(பி - ம்) § 'இடுகாட்டுளேற்றுப்பனை'

97. பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகஞ்
செயற்பால செய்யா விடினுங்—† கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
வென்னை யுலகுய்யு மாறு

1. மழை:— "கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்......எல்லா வுயிர்க்கு மில்லால் வாழ்க்கை" (புறம். 203), "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை" (நான்மணி. 48), "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற்றுங் கொல்லோ வுலகு" குறள். 211.

2-3. கயற்புலால்.........சேர்ப்ப : உயிரில்பொருட்குணத்திற்கு (நன் - மயிலை. சூ. 453) மேற்கோள்.

(பி - ம்) † 'கயப்புலால்'

98. ஏற்றகை மாற்றாமை யென்னானுந் §தாம்வரையா
தாற்றாதார்க் கீவதா மாண்கட—னாற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

(பி - ம்) § 'தம்வரையான்', 'தாம் வரையார்'.

2. ஆற்றாதார் - ஒன்றும் செய்ய முடியாதவர்; வறிஞர்; "ஆற்றாமாக்க ளரும்பசி களைவோர்", "ஆற்றா மக்கட் காற்றுந்துணை யாகி" மணி. 11 : 93 ; 17: 64 ; 19: 35.

1-2. "அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம், பெற்றா டமியள்மூத் தற்று" (குறள். 1007), "எற்றார்கட் கெல்லா மிசைநிற்பத் தாமுடைய, மாற்றார் கொடுத்திருப்ப வள்ளண்மை" (பழ. 318), "வாயாலில்லை யென்பதைக் கையாலில்லை யெனல்" பழமொழி.

3 - 4. "சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா ஞென்றெப், பெறுநன்றி மன்னும் பெரிதென் - றுறுநன்றி, தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே, வானவா முள்ளத் தவர்" யா - வி. எழுத். சூ. 4.

மு. "வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங், குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள். 221), "ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோ, ராற்றா மாக்க ளரும்பசி களைவோர், மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை" (மணி. 11: 93-5), "மாண்புடையாளர் கேண்மையர் தத்தம் வழிமுறை யொழுக்கினி லமர்ந்தோர், சேண்படு நிரப்பி னெய்தினோர் புரப்போர்த் தீர்ந்தவர் தந்தை தாய் குரவர், காண்டகு முதவி புரிந்துளோ ரினையோ ரொன்பதின் மருமுளங் களிப்ப, வேண்டுறு நிதிய மளிப்பின்மற் றொன்றே கோடியா மெனமறை விளம்பும்" காசிகண்டம்.

99. இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்று
மறப்பயன் யார்மாட்டுஞ் செய்க—முறைப்புதவி
னையம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

1. நாலடி. 38.

2. அறப்பயன் - ஈகை. புதவு - வாயில்; மதுரை. 65.

3. கடிஞை - பிச்சைப்பாத்திரம்; சிலப். 10 : 98 ; மணி. 13 : 103.

மு. 'பலதுளி பெருவெள்ளம்' என்பது பழமொழி.

100. †கடிப்பிகு கண்முரசங் காதத்தோர் கேட்ப
ரிடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்ப
ரடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

1. கடிப்பு - அடிக்குங்குறுந்தடி. கண் - அடிக்குமிடமாகிய வாத்தியத் தினடு. கடிப்பிகுகண் முரசம்: "கடிப்பிகு முரசின் முழங்கு" (குறுந். 270), "முரசுகடிப் பிகுப்பவும்" (புறம். 158), "ஙாக்கடிப்பாக வாய்ப்பறை யறையினும்" (சிலப். 14 : 29 ; மணி. 25 : 51), "தொடித்தோட் டென்னவன் கடிப்

பிகு முரசே" (சிலப். 17 'என்றியாம்'), "கண்முரசியம்பி" (மணி. 1 : 69), "முரசுகடிப் பிகுத்த மூரிமுற்றத்து" பெருங். 1. 37. 5. காதம் - எழுநாழி கைவழி.

2. "நாலடியாருள்,......யோசனையோர் கேட்பர்......எனத் தற்சமமாகக் கூறினாற்போல, யாமும் உருவபேதமென்னுமலே ரூபபேதமென்றும்" (பிர யோக. சூ. 37 - உரை.) யோசனை - நாற்காத வெல்லை; சீவக. 1901-ந.

மு. குறள். 233, 234.

(பி - ம்) † 'கடிப்பிடு'

நான்காம் அத்காரம், பழவினை.

101\. † பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

1\. குழக்கன்று : தொல் உரி. சூ. 15 - சே ; நன் - மயிலை. சூ. 270; நற். 359: 3. உய்த்துவிடின், ஒருசொல் ; குறள். 121.

2 - 3. தொல்லைப் பழவினை - முற்பிறப்பிற்செய்த கருமம்.

மு. "முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்", "பெற்றி கருமம் பிழை யாமற் செய்குறின், பற்றின்க ணில்லா தறஞ்செய்க - மற்றது, பொன்றுப் புகழ் நிறுத்திப் போய்ப்பிறந்த வூர்நாடிக், கன்றுடைத் தாய்போல் வரும்" (அற நெறி. 60, 95), "முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார், பிற்பெரிய செல்வம் பெறலாமோ - வைப்போ, டிகலிப் பொருள்செய்ய வெண்ணியக்கா லென்னு, முதலிலார்க் கூதிய மில்" (பழ. 312), "பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச், சொரியினும் போகா தம" குறள். 376.

(பி - ம்) † 'பல்லாவொளித்துவிடினும்'

102\. உருவு மிளமையு மொண்பொருளு முட்கு
மொருவழி நில்லாமை கண்டு—மொருவழியே
யொன்றேயு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

1\. உரு - கண்டார் விரும்புந் தோற்றப்பொலிவு (குறள். 684) உட்கும் - (பலரும்) கூசத்தக்க மதிப்பும்.

மு. "இளமையுங் காமமு நின்பாணி நில்லா......உறைநாள் கழித லுருமைக் காண்டை, கடைநா ளிதுவென் றறிந்தாரு மில்லை......வேற்றுமை கொண்டு பொருள்வயிற் போகுவாய், கூற்றமு மூப்பு மறந்தாரோடு", "கூற்றம்போற் றுறைபடிஇக் கொடுதாளுந் [illegible]", "இளமையுங் காமமு மோராங்கு பெயர்ந்தா,

வளமை விழைதக்க துண்டோ வுளநாள் ", " யாறுநீர் கழிந்தன்ன விளமை " (கலி 12, 17, 18, 20), "இளமையு மெழிலும் வானத் திருவில்லி னீண்டை மாயும்" (மேருமந்தரம். 109), "இளமையு நிலையாவா வின்பமு நின்ற வல்ல, வளமையு மஃதேயால் வைகலுந் துன்ப வெள்ள, முளவென நினையாதே செல்கதிக் கென்று மொன்று, விளைநில னுழுவார்போல வித்துநீர் செய்து கொண்மின்" வளையாபதி ; நாலடி. 120.

103. வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றுன்
விளங்காய் திரட்டினா ரில்லை—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

1. "வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை : என்னுமுறையானே முடவன் மலையிற்றேனை அவாவி வாயூறினாற் போல" சிவஞானபோதமா பாடியம், சூ. 6 ; அதிகரணம், 2 ; வெண்பா, 5.

2. "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" (குறள். 377), "அளந்துதாங் கொண்டு காத்த வருந்தவ முடைய நீரார்க், களந்தன போக மெல்லா மவரவர்க் கற்றை நாளே, யளந்தன வாழு நாளும்" (சீவக. 213), "தந்தம், விதியின் பயனே பயன்" (மூதுரை. 19), "தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார், பூந்தா மரையோன் பொறிவழியே" நல்வழி. 30.

4. "இல்லை என்பது 'இல்' என நின்றது ; 'காரெனச் செய்தாரு மில்' என்றாற் போல" நீலகேசி. மொக்கல. 101- சமயதிவாகரமுனிவருரை.

3-4. "விளங்காய்......செய்தாருமில் : என்பதே காட்டினார் உரையாசிரியரும்" தொல். மரபு. சூ. 10 - ந.

மு. நாலடி. 105, 109 ; " வளம்பட......செய்தாருமில் : இது, நான் கடியாய் மூன்றும் அடி இறுதி, தனிச்சொற்பெற்று வருதலின் நேரிசைப் பாற்படும் " (தொல். செய். சூ. 113 - இளம்), " மூன்றும் அடியின் இறுதி, தனிச்சொற்பெற்று இரண்டுவிகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா " (யா - கா. செய். சூ. 5), " இனி, வெண்பாப்போலியாவது இவ்விலக்கணங் களான் மிக்கும் குறைந்தும் இதுவே போலவரும் ; வரலாறு : ' வளம்பட...... செய்தாருமில் ' இது, நடுவு தனிச்சொலின்றி மூன்றுமடி குறைந்து நான்கடி யாய்ப் பதினைந்து சீராய்வந்தது " (வீர. யாப்பு. சூ. 21), " பலவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா " (யா - வி. செய். சூ. 8), " அளவடியானும் செப்ப லோசையானும் வந்த வெண்பா " யா - கா. செய். சூ. 2 ; இ - வி. சூ. 721.

104. உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி

வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்.

1. "உறற்பால, தீண்டா விடுத லரிது", "உறற்பால யார்க்கு முறும்" (நாலடி. 109, 117; பழ. 15), "விழுமிய, வேண்டினும் வேண்டா விடினு முறற் பால, தீண்டா விடுத லரிது" (பழ. 62), 'மன்னுப் பொருளு மன்ன வியற்றே' என்ற (தொல். கிளவி. 34) சூத்திரத்தின் உரையில் இவ்வடியை மேற்கோள் காட்டுப (ஷை ஷை ஷை சே; ந; இ-வி. சூ. 315.) உறுவர் - முனிவர்; (சீவக. 2376 - ந) தேவரெனக்கூறினுமமையும்; வலிமைமிக்கவர் என்பாரு முளர்.

3. வறப்பின் - வறண்டால்.

4. சிறப்பின் - மிகுமாயின்.

மூ. "ஊழ்வினை யுருத்துவந் தூட்டும்" (சிலப். பதி. 57), "ஒளிப்பினு மூழ்வினை யூட்டாது கழியாது" (இறை. சூ. உ - உரை), "இட்டவித்தி னெதிர்ந்துவந் தெய்தி, யொட்டுங்காலை யொழிக்கவு மொண்ணு" (சிலப். 10: 172 - 3) என்பதனுரையில் இச்செய்யுளை மேற்கோள்காட்டினர் அடியார்க்கு நல்லார்.

105. திணைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வார்
நினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற.

1. தேசு - புகழ்; "திருவுந் தேசு நோக்குமின்" சீவக. 771 - ந.

2. வைகலும் - நாடோறும். பாடு - பெருமை; நாலடி. 187, 252, 281, 292.

1-2. 'திணை, பனை' என்பன சில அளவுகள்; குறள். 104, 224, 433, 1282.

மூ. நாலடி. 103 குறிப்பைப்பார்க்க.

106. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரே—கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

1. ஆன்ற - அமைந்த. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார்: நாலடி. 252.

2. கல்லாதார்: நாலடி. 249.

3. சேதனம் - சைதன்யம்; (ஞானமிர்தம், 1, 4, 27, 51). சேறு - ஸாரம். "சேறுபடு மலர்சிந்த விரைந்தே", "சேறுபடு கோதை" (சீவக. 426, 2019), குழம்பு எனலுமாம்; ஞானமிர்தம், 43.

4. கோது-பயனில்லாத கூறு ; (நாலடி. 34) "கோது செய்குணக் கோதி னுட் கோதனென்" சீவக. 240 ; சிவஞானபோதமாபாடியம், சூ. 9 ; அதி, 1 - மேற்கோள்.

107. இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லா—†மடும்பம்பூ
வன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும்.

1. இடும்பை - துன்பம் ; சீவக. 252 : 4.

2. நெடுங்கடை : பெருங். 1. 47 : 5. உழலுதல் - சுழலுதல் ; ஈண்டுப் போக்குவரவு (ஞானமிர்தம், 4). அடும்பு - ஒருவார்கொடி ; கலி. 132.

மு. நாலடி. 31 ; சீவக. 2680.

108. அறியாரு மல்ல ரறிவ தறிந்தும்
பழியொடு பட்டவை செய்தல்—*வளியோடி
நெய்த னறவுயிர்க்கு† நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும்

1. அறிவதறிந்தும் : நாலடி. 74 : 1.

3. கடல் தண் சேர்ப்ப : நாலடி. 97.

மு. "நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்த, னுண்மை யறிவே மிகும்" (குறள். 373), "ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை" சிலப். 10 : 171.

(பி - ம்) * 'வழியோடி' † 'நீள் கழித்தண் சேர்ப்ப'

109. ஈண்டுநீர் வையத்து ளெல்லாருர் மெத்துணையும்
வேண்டார்மற் றீய § விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது.

1. ஈண்டுநீர் - நிறைந்த கடல் சூழ்ந்த ; பெருநீர் என்றுமாம்.

3 - 4. மு. பழமொழி, 62 : 3 - 4 ; நாலடி. 109; "உறற்பால...... அரிது", "உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா", "உறற்பால யார்க்கு முறும்" (நாலடி. 104, 117), "பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச், சொரியினும் போகா தம" (குறள். 376), "திருவுறு கின்றுழி மகிழ்ந்துந் தீர்வுழிப், பருவர லெய்தியும் பாசந் தன்னிடை, யரிதுணர் கேள்விய ரழுங்கு வார்கொலோ, வரு வது வருமது மறுக்க லாகுமோ" (கந்த), உறற்பால......அரிது' என்றாற்போல ஈண்டு' அருமை, இன்மை மேனின்றது" குறள். 7 - பரிமேல்.

(பி - ம்) † 'எட்டுணையும்' § 'வினைப்பயனல்லது', 'வினைபயனல் லவை'

110. சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
வுறுகாலத் தூற்றாகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனா
லிறுகாலத் தென்னை பரிவு.

1. "கட்டுண்ண வேண்டும் பாவம் ஆண்டின்மையுணர்க; பிறரும் இச் சமயத்தார், 'சிறுகா பெருகா முறை பிறழ்ந்து வாரா' என்றதனானுமுணர்க" சீவக. 1089 - ந.

2. உறுகாலத்தூற்றாகா - துன்பமுறுங்காலத்திலூன்றுகோல்போல உதவ மாட்டா; நாலடி. 117.

3. பொறி - பயனைத் தருவதாய விதி; குறள். 618. சிறுகாலைப்பட்ட பொறியும்: நாலடி. 35; சீவக. 475.

2 - 3. ஆமிடத்தே யாகுஞ் சிறுகாலைப் பட்ட பொறியும்: "ஈண்டுங்கா லீண்டும்......செல்வம்" (நாலடி. 93), "செல்வந் தொகறபால போழ்தே தொகும்" பழ. 120.

4. "அன்றாங்கா, லல்லற் படுவ தெவன்" குறள். 379.

மூ. "இன்பம தடைந்த காலை யினிதென மகிழ்ச்சி செய்யார், துன்பம துற்றபோதுந் துண்ணெனத் துளங்கிச் சோரா, ரின்பமுந் துன்பந் தானு மிவ் வுடற் கியைந்த வென்றே, முன்புறு தொடர்பை யோர்வார் முழுவது முணர்ந்த நீரார்" (கந்த), "வருந்தி யழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமி னென்றாற் போகா - விருந்தேங்கி, நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தாநினைந்து, துஞ்சுவதே மாந்தர் தொழில்" (நல்வழி. 5), "சாதலும் பிறத்த றானுந் தம்வினைப் பயத்தி னாகு, மாதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய், நோதலும் பரிவு மெல்லா நுண்ணுணர் வின்மை யன்றே, பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி யென்றான்" சீவக. 269.

ஐந்தாம் அதிகாரம், மெய்ம்மை.

111. இசையா வொருபொரு ளில்லெனல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை—நசையழுங்க
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து.

1 - 2. இசையாவொருபொருள்.........வசையன்று: சொல்லெச்சத்திற்கு (நன் - மயிலை. சூ. 395; நன் - வி. சூ. 360) மேற்கோள்.

3 - 4. செய்ந்நன்றி கொன்றாரிற் குற்றமுடைத்து : "எந்நன்றி கொன் றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" குறள். 110.

மூ. "ஒல்லுவ தொல்லு மென்றலும் யாவர்க்கு, மொல்லா தில்லென மறுத்தலு மிரண்டு, மாள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே, யொல்லா தொல்லு மென்றலு மொல்லுவ, தில்லென மறுத்தலு மிரண்டும் வல்லே, யிரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர், புகழ்குறை படூஉம் வாயில்" (புறம். 196), "இசைவ கொடுப்பதூஉ மில்லென்பதூஉம், வசையன்று வையத் தியற்கை யஃதன்றிப், பசைகொண் டவனிற்பப் பாத்துண்ணு தாயி, னசைகொன்றான் செல்லுலக மில்" (பழ. 24), "சிதைவகல் காதற் றாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப், பதவியந் தணரை யாவைப் பாலரைப் பாவைமாரை, வதைபுரி குநர்க்கு முண்டா மாற்றலா மாற்றன் மாயா, வுதவிகொன் றார்க்கொன் றேனு மொழிக்கலா முபாய முண்டோ" இராமாவதாரம்.

112. தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
யெக்காலுங் குன்ற விலராவ—ரக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாங் கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு.

1. நீர்மை—குணம்.

2. குன்றலிலராவர்—குறையார். அக்காரம்—சருக்கரை.

2-4. "அக்காரம்.........வேம்பு: என்றவழி, 'யாவர்' என்பது இழிவு குறித்துநின்றது; 'தேவர்' என்பது உயர்வுகுறித்துநின்றது" தொல். இடை. சூ. 7 - இளம்; பேர்; கல்.

3 - 4. "கைக்குமே, தேவரே தின்னினும் வேம்பு" (பழ. 114), "கைக் குமாந், தேவரே தின்னினும் வேம்பு : என்றவழி, ஏகாரம் சிறப்புக்குறித்து நின் றது" (தொல். இடை. சூ. 46 - பேர்), "கைக்குமாம்.........வேம்பு : இஃது இழிவுசிறப்பு" நேமி. சூ. 52.

113. காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாய மீனிற் பலராவ—ரேலா
விடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடைய மென்பார் சிலர்.

1. "கண்ணுடி வென்று" (சீவக. 2327) என்பதற்கு, "கண் எல்லாரிடத் தும் உலாவி வென்று' எனப்பொருள் கூறி, "காலாடு போழ்தின்' என்றாற் போல" எனக் கூறுவர் நச்சினார்க்கினியார்.

2. மீன் - நட்சத்திரம்.

மூ. நாலடி. 283, 284, 290; பெருங். 3. 21 : 94; புறம். 217 : 4 - 6; "கெட்டார்க்கு நட்டா ரில்லென் பதோ" (குறள். 752, 799, 1293), "முட்டின்

ஞொருவருடைய பொழுதின்க, ணட்டிற்றுத் தின்பவ ராயிரவ ராபவே, கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக், கெட்டார்க்கு நட்டாரோ வில்" (பழ. 59), "பொருள் கையுண்டாய்ச் செல்லக் காணிற் போற்றி யென்றேற் றெழுவ, ரிருள்கொ டுன் பத் தின்மைகாணி லென்னே யென்பாரு மில்லை" (திருவாய்மொழி. 9. 1 : 3), "அற்ற குளத்தி லறுநீர்ப் பறவைபோ, லுற்றுழித் தீர்வா ருறவல்ல - ரக்குளத் திற், கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே, யொட்டி யுறுவா ருறவு" மூது ரை. 17; சீவக. 2535.

114. வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவண தெய்த விருதலையு மெய்து
நடுவண தெய்தாதே னெய்து முலைப்பெய்
தடுவது போலுந் துயர்.

1 - 2. "அருளிலார்க் கவ்வுலக மில்லை பொருளிலார்க், கிவ்வுலக மில்லாகி யாங்கு", "ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கொண்பொரு, ளேனை யிரண்டு மொருங்கு" (குறள். 247, 760), "எல்லாம், பொருளிற் பிறந்து விடும்" (நான்மணி. 7), "பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே யம்மூன்று, மாராயிற் றானே யறம்பொரு ளின்பமென், றாரா ரிவற்றி னிடையதனை யெய்துவார், சீரா ரிருதலையு மெய்துவர்" (வெங்கைக்கோவை, 262), "இல்லா ரிருமையு நல்ல வெய்தார்", "வறியா ரிருமையு மறியார்" பழ.

ழ. "கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயி, னெல்லா ருஞ் சென்றங் கெதிர்கொள்வ - ரில்லானை, யில்லாளும் வேண்டாண்மற் றீன் றெடுத்த தாய்வேண்டாள், செல்லா தவன்வாயிற் சொல்" (நல்வழி, 34), "இன் சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல், வன்சொல்லி னல்லது வாய் திறவா - வென்சொலினுங், கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன் ஞாலம்" (நீதிநெறி. 11), "பணந்தானே யறிவாகும் பணந்தானே வித்தையு மாம்......பணமில்லா தவர்பிணமாம் பான்மை சேர்வர்" (தண்டலை)

115. நல்லாவின் கன்றாயி னாகும் விலைபெறூஉங்
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தி னுழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

1. நாகு—ஈனுக்கிடாரி; பெருங். 1.39: 64; பெரிய. ஆனாய. 11.

4. "நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார், சொற்பொருள் சோர்வு படும்" (குறள். 1046), "இல்லானை, யில்லாளும் வேண்டாண்மற் றீன் றெடுத்த தாய்வேண்டாள், சொல்லா தவன்வாயிற் சொல்" (நல்வழி, 34), "ஏழை சொல் அம்பல மேறாது" பழமொழி.

116. இடம்பட நன்ஞானங் கற்பினு மென்று
மடங்காதா ரென்று மடங்கார்—தடங்கண்ணா
யுப்பொடு நெய்†பா லயிர்காயம் பெய்திடினுங்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

3. அயிர் - சருக்கரை; வெல்லமுமாம்; காயம் - உறைப்பு; "காயங்கொண்ட விஞ்சி" மலைபடு. 126.

3 - 4 "ஐங்காய மிட்டரைத்துக் கரைத்தாலுந், தன்காரம் போகாதாம் பேய்ச் சுரைக்காய்" (பழமொழி) உம்மைச்சொல் உயர்வுசிறப்புக்குறித்து வந்ததற்கு (தொல். இடை. சூ. 7-ந) மேற்கோள்.

மு. 'தடங்கண்ணாய்' என்று மகடூஉமுன்னிலை பெற்றுவருதற்கு (யா - கா. சூ. 4) மேற்கோள்.

(பி - ம்.) † 'பாறயிர்காயம்பெய்திடினும்'

117. தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
வென்னை யவரொடு பட்டது—புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
வுறற்பால யார்க்கு முறும்.

1 - 2. "கதநன்று சான்றாண்மை தீது கழிய, மதநன்று மாண்பில்லார் முன்னர்"

3. விறல் - (தீநாற்றம் போக்கும்) வலி.

